www.eelamview.com


# விடுதலைப்புலிகள்

குரல் 89 சித்திரை - வைகாசி 1999 அன்பளிப்பு 5/=


## உள்ளே


★ இனி வெல்வது எமதுமுறை
★ வீரத்தின் வித்துக்கள்
★ போர் எந்தக் கட்டத்தில் உள்ளது!
★ எங்கள் பட்டினிக்கும் பதில் என்ன?
★ வன்னிக்களத்தில் புலிகளுடன்
தேர்தல் களத்தில் 'ரணகோஷ'வுடன்
★ குருதிக்கொடைகள்
★ கவிதை
★ உலைக்களம்


# ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் படையினரின் சதிச்செயல்கள்

**சோதனைச் சாவடிகளாலும் - சுற்றிவளைப்புத் தேடுதல்களாலும் - ஊரடங்குச் சட்டங்களாலும் குடாநாட்டு மக்களை சிறைக்கைதிகளாக வைத்திருந்த சிங்களப்படைகள், இப்போது, அடையாள அட்டைத் திட்டம் மற்றும் இராணுவத்திற்கு ஆட்சேர்ப்பு முயற்சிகள் என்று மென்மேலும் தமிழ் மக்களை இம்சிக்கத் தொடங்கியுள்ளன. ஆக்கிரமிக்கப்பட்டுள்ள வன்னிப் பகுதியிலும் இத்தகைய ஆட்சேர்ப்பு முயற்சிக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.**

இந்தியப் படைகளின் ஆக்கிரமிப்புக் காலத்தில் தமிழ்த் தேசிய இராணுவம் என்ற பெயரில் இந்தியப் படைகள் தமக்கு உதவியாக ஒரு துணை இராணுவப்படையை நிறுவ தமிழ் இளைஞர்களை இழுத்தது போல, இப்போது, சிங்களப் படைகளும் இராணுவத்திற்கு தமிழர்களை இணைக்கும் முயற்சி என்ற போர்வையில் ஒரு துணை இராணுவப்படையை அமைக்க முயற்சிகளை மேற்கொள்கின்றன.

முதற்கட்டமாக எந்த ஒரு தமிழ் இளைஞனும் சிங்களப் படையில் இணைய முன்வரவில்லை என செய்திகள் கூறுகின்றன. இந்தியப் படைகளின் முயற்சியும் முதலில் தோல்வி கண்டிருந்தது. அதன் பின்னரே பலவந்தமாக இளைஞர்களைப் பிடித்து கட்டாய இராணுவப் பயிற்சி கொடுத்து – புலிகளுக்கு எதிராக சண்டையிடும்படி அவர்களை நிர்ப்பந்தித்திருந்தது.



இதேபோன்று அடுத்தடுத்த கட்டங்களில் சிங்களப்படையும் பலவந்தமாக தமிழ் இளைஞர்களை இராணுவத்தில் சேர்க்க முயற்சிகளை மேற்கொள்ளலாம் என கருதப்படுகின்றது. இந்த முயற்சிக்காக ஏற்கெனவே இராணுவத்திற்கு துணைபுரியும் தமிழ்க்குழுக்களில் சிலவற்றை பயன்படுத்தவும் இராணுவ தலைமைப்பீடம் திட்டம் வகுக்கலாம் எனவும் கருதப்படுகின்றது.

ஆக்கிரமிக்கப்பட்டுள்ள இன்னொரு நகரான வவுனியாவில் சில தமிழ்க்குழுக்கள் இந்த பலவந்த ஆட்சேர்ப்பை சிறிய அளவில் ஆரம்பித்துவிட்டதாக வவுனியா சென்றுவரும் வன்னிவாழ்மக்கள் ஆதாரங்களுடன் தகவல் கூறுகின்றனர்.

இந்தியப்படைகள் செய்ததைப் போல ஒரு தமிழ்க்குழுவை மட்டும் பலவந்த ஆட்சேர்ப்பிற்கு பயன்படுத்தியதைப்போலில்லாது, சிங்கள இராணுவத் தலைமைப்பீடம், மாவட்டத்திற்கு ஒன்று அல்லது இரண்டு தமிழ்க்குழுக்கள் என்ற ரீதியில் பலவந்த ஆட்சேர்ப்பிற்கு பயன்படுத்த திட்டமிட்டுள்ளதாக நம்பப்படுகின்றது.

ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் வாழும் தமிழ் இளைஞர்களை பலிக்கடாக்கள் ஆக்கும் இந்த சதித்திட்டம் அங்கே வசிக்கும் மக்களை கிலிகொள்ளச் செய்துள்ளது.

இதேவேளை, கொழும்பில் தமிழ் மக்களை அடையாளம்காட்ட விசேட அடையாள அட்டைத்திட்டத்தை அமுல் செய்த சந்திரிகா அரசாங்கம் யாழ்ப்பாணத்தில் வயது ரீதியாக மக்களை வகுத்து ஒவ்வொரு பகுதியினர்க்கும் வேறு வேறு அடையாள அட்டைகளை வழங்கி நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

இந்த அடையாள அட்டைத் திட்டங்கள் முற்றுமுழுதாக இராணுவ நோக்கம் கொண்டவை.

ஏற்கெனவே பயங்கரவாதத்தடைச் சட்டத்திலுள்ள கொடூரமான சரத்துக்களால் சொல்லொணா கொடுமைகளை அனுபவித்துவரும் தமிழ்மக்கள் இந்த அடையாள அட்டைத்திட்டங்களினால் மென்மேலும் வாழ்வியல் துன்பங்களையும் உயிர் ஆபத்துக்களையும் எதிர்கொள்ளப் போகின்றனர்.

இவையெல்லாம் சிங்கள அரசின் அப்பட்டமான தமிழர்விரோதக் கொள்கையின் பிரதிபலிப்புகள் ஆகும்.

விடுவிக்கப்பட்டபகுதிகள் எனக் கூறிக்கொண்டு ஒரு நரகவாழ்க்கையை தமிழ்மக்களுக்குப் பரிசாக சிங்கள அரசு வழங்கிவருகின்றது என்பதே உண்மையாகும். ⊙

தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வ ஏடு

www.eelamview.com

www.eelamview.com



# போராட்டமே தமிழினத்தின் வாழ்வு

காலத்தாயின் கருவறைக்குள் உயிர் பெற்றுவரும் 21ம் நூற்றாண்டு இன்னும் சில மாதங்களில் பிறக்கப்போகின்றது.

புதிய நூற்றாண்டை, அமைதி நூற்றாண்டாக ஆக்கிப்படைக்க உலகசமூகம் விரும்புகின்றது.

தேசிய இனப்பிரச்சனைகள் காரணமாக ஆயுதப் போர்களில் ஈடுபட்டிருக்கும் அரசாங்கங்களும் - போராளி இயக்கங்களும் அமைதி வழியில் அரசியல்தீர்வு காணும் நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என, அது அறைகூவல் விடுக்கின்றது.

இலங்கைத்தீவின் இனச்சிக்கலுக்கு சமாதானவழி முறையில் நியாயமான - நிரந்தரத் தீர்வொன்றைக் காணும் இலக்குடன் சிங்கள அரசாங்கத்துடன் அரசியல் பேச்சுக்களில் ஈடுபட புலிகள் இயக்கம் தயாராகவே உள்ளது.

கடந்த (1998, நவம்பர்) மாவீரர் நாள் செய்தியில் தலைவர் பிரபாகரன் அவர்கள் சமாதான முயற்சிபற்றிய ஒரு தெளிவான கருத்தை முன்வைத்திருந்தார். சர்வதேச மத்தியஸ்தத்தையும் இதற்காக கோரியிருந்தார்.

ஆறுமாதங்கள் கடந்துவிட்ட இன்றைய நிலையிலும் தலைவரின் சமாதான அழைப்பிற்கு சாதகமாக சந்திரிகா அரசாங்கம் பதிலளிக்கவில்லை. இதற்குப்பதிலாக போர்க்கூச்சல்களே சிங்கள அரசின் பக்கமிருந்து தொடர்ச்சியாக வந்தவண்ணமுள்ளன.

அண்மையில், வன்னிக்கு வந்து புலிகளின் சமாதான நல்லெண்ணத்தை சுமந்தபடி திரும்பிச்சென்ற சிங்களத்தின் சர்வமத குருமாரின் குழுவிற்கு, போர் தொடரும் என்ற காட்டமான செய்தியையே, அம்மையார் பதிலாக வழங்கியிருந்தார்.

சொல்வதுடன் அவர் நின்றுவிடவில்லை. புதிய நூற்றாண்டில் போரை, புத்தூக்கத்துடன் நடாத்துவதற்கான முன்னேற்பாடாக புதிய - புதிய ஆயுததளபாடங்களை அம்மையாரின் அரசாங்கம் கொள்வனவு செய்து வருகின்றது.

படையினர் கைப்பற்றியுள்ள தமிழர் நிலத்தின் விஸ்தீரணத்தை உதாரணத்திற்காகக் காட்டவிரும்பும் சந்திரிகா அம்மையார், தமிழரின இனப்பிரச்சனைக்கு இராணுவத் தீர்வு கண்டுவிட முடியும் என்பதிலேயே நம்பிக்கையாக இருக்கின்றார்.

வன்முறையின் கொடூரத்தையும் - போரின் துயரத்தையும் உணர்ச்சி பூர்வமாக எடுத்துரைத்து - வாக்குத்திரட்டி அதிகாரத்தைக் கைப்பற்றிய அம்மையார், இப்போது, படையினர் ஆக்கிரமித்த தமிழர் நிலங்களை அடையாளம் காட்ட நிறம் தீட்டப்பட்ட நிலவரைபடங்களை விநியோகித்து வாக்குவேட்டை நடாத்தி - ஆட்சி அதிகாரத்தை நிலைநிறுத்த முயல்கின்றார். பேச்சுவார்த்தைகள்மூலம் தீர்க்க முடியாத பிரச்சனைகளே இல்லை! என்று சித்தாந்தம் பேசிய அம்மையார், இப்போது தமிழரின் இனப்பிரச்சனையைத் தீர்க்கும் சர்வரோக நிவாரணி போர்தான்! என தத்துவம் பேசுகின்றார்.

போர் பிரசவித்துவரும் பெருந்தொகையான உயிரழிவுகளைப் பற்றியோ - பிரமாண்டமான பொருண்மிய நாசத்தைப் பற்றியோ அம்மையார் சிறிதும் கவலைப்படவில்லை. சிறிலங்காவின் அடுத்த ஜனாதிபதித் தேர்தலையும் வென்று - போரைத் தொடர அவர் திடசங்கற்பம் பூண்டுள்ளார்.

இதேவேளை, தமிழரின் இனப்பிரச்சனையைத் தீர்க்க தம்மிடம் நல்லதிட்டம் உள்ளது என - அடுத்த அரசாங்கத்தை அமைக்கத் துடிக்கும் ஐ. தே. கட்சி, அடிக்கடி அறிவிப்புகள் செய்கின்றது. அது என்ன திட்டம் என இன்றுவரை அது பகிரங்கப்படுத்தவில்லை.

முன்னைய ஐ.தே.கட்சி அரசாங்கம் போரை நடாத்தியபோது படையினர் சந்தித்த உயிரிழப்பு குறைவு என்றும், இப்போதைய பொ.ஐ.முன்னணி அரசாங்கம் நடாத்துகின்ற போரில் பாரிய உயிர் அழிவுகளை படையினர் எதிர்கொள்கின்றனர் என எண்ணிக்கைகளை ஒப்பிட்டுக் காட்டி தமது அரசாங்கமே போரை திறம்பட நடாத்தியது என சிங்கள மக்களுக்கு எடுத்து விளக்குகின்றதேயொழிய தமிழினத்திற்கு எதிரான போர்க்கொள்கையை ஐ.தே.கட்சி கண்டிக்கவில்லை.

TAMIL EELAM

புலிகளின் குரல்

அடுத்ததடவை பதவிக்கு வந்தால் போரை செம்மையாக நடாத்துவதற்கு வசதியாகவும் அதேவேளை, அம்மையாரின் அரசாங்கம் நடாத்தும்போரை இராணுவரீதியாக விமர்சித்து அரசியல் நடாத்துவதற்கு உதவியாகவும் இராணுவ ஆலோசகர் ஒருவரை ஐ.தே. கட்சியின் தலைமைப்பீடம் நியமித்துள்ளது. பிரேமதாசாவின் நண்பனாக இருந்த கிழக்கு மாகாண முன்னாள் இராணுவத்தளபதி மேஜர் ஜெனரல் லக்கி அல்கம என்பவரே அந்த ஆலோசகராகும். கிழக்குமாகாணத்தில் சிங்களப்படை நடாத்திய தமிழ் இனப்படுகொலைகளில் அந்தத் தளபதிக்கும் பெரும்பங்குண்டு. ஐ.தே.கட்சி ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றினால் போர் நிறுத்தப்பட்டுவிடும் என எண்ணுவது மடமைத்தனமானது.

கொழும்பில் அரசாங்கங்கள் மாறினாலும் தமிழ்மக்கள் மீதான அடக்குமுறை ஆட்சியானது மாற்றமற்ற ஒன்று என்பது இலங்கைத்தமிழரின் அரசியல் வரலாறு.

தமிழரின் இனப்பிரச்சனையை இராணுவ வழிமுறைமூலம் தீர்த்துவைக்க வேண்டும் என்ற பேரினவாதச்சிந்தனையே சிங்கள அரசின் நிரந்தரக்கொள்கையாகும். இந்த ஆட்சிக்கதிரையை ஓ வேதற்காக பதவியில் அமர்த்தப்படும் எந்த அரசாங்கமும், அரசின் போர்க் கொள்கையை தொடர்ந்து முன்னெடுத்தே தீரும். இந்த போர்க்கொள்கையை மாற்றியமைக்கும் துணிவும்- ஆளுமையும்- நேர்மையும் சிங்களத்தின் அரசியல்வாதிகள் எவர்க்கும் இல்லை என்ற உண்மையை தமிழ்மக்கள் உணர்ந்து கொள்ளவேண்டும்.

இந்தநிலையில் தமிழீழமக்களாகிய நாம் ஒரு உண்மையை ஏற்றுக்கொண்டு- செயல்படவேண்டும்.

தமிழீழமக்கள்மீது-சிங்கள அரசு ஒரு ஒட்டுமொத்தப் போரைத் தொடுத்து - இனஅழிப்பை நடாத்திக்கொண்டிருக்கின்றது.

இந்த இனஅழிப்புப்போருக்கு முகங்கொடுத்து- களத்தில் சமராடவேண்டிய வரலாற்றுக் கட்டாயத்திற்குள் எமது இனம் உள்ளது. இந்த இராணுவச்சவாலை எமது மக்கள் எதிர்கொள்ளத்தான் வேண்டும்.

போரில் நாம் வெற்றிபெறுவதும் - நிம்மதியான, கௌரவமான, சுதந்திரமான எமது மக்களின் வாழ்க்கையும், பிரிக்கமுடியாதபடி ஒன்று கலந்துள்ளன.

எனவே சிங்களப் படைகளை எமது மண்ணில் தோற்கடிக்கும் போதுதான் எமக்குள்ள அரசியல் உரிமைகளை அநுபவிக்கும் சுதந்திரத்தை நாம் பெற்றுக் கொள்ள முடியும்.

## நெடுநாள் வாடை

நாராய் நாராய் _
செங்கால் நாராய் _
உறை இடா கத்தியின்
கூர்மையொத்த
நின் நா நாராய் _

நீயும் உன் துணையும்
வடதிசைக் கடலேகி
தென்திசை நோக்கி
பனிப்பிரதேசம்
கழுகுகள் வட்டமிடும்
வரைச் சேர்ந்த
எம் மக்களைக் காண்பீர்.

துப்பாக்கி ரவைகள்
துளைத்த மரக்கிளையில்
தூங்காமல் தங்கி
சிறகை விரித்தால்
கூடல் சூழ் அவ்வூரை
காண்பது எளிது.

விண்ணோக்கும் உன் பார்வையில்
மண் சுமக்கும் உடல்களில்
காயம் சுமந்த முலைகள்
பெண் என்றும்
கனல் சுமந்த கண்கள்
ஆண் என்றும்
இனம் பிரித்துக் காண்பாய்.

கடைசியாய்
ஒப்பாரிச் சத்தத்தில்
தாலாட்டுக் கேட்கும்
குழந்தைகளிடத்து
காதுகளைக் கொடு
இன்னஞ்சிறு உதடசைத்து
அவர்கள் சொல்வார்கள்

வரலாற்றின் புதைகுழியில்
மனிதர்களைப் புதைக்கலாம்
மாவீரர்களை அல்ல!

- நா. முத்துக்குமார்
(தமிழ்நாடு)



www.eelamview.com

# இனி வெல்வது எம்முறை


"விடுதலை உணர்வே மனித வாழ்வின் சாராம்சமும் அதன் உயிர் மூச்சும் ஆகும். மனித வரலாற்றினை இயக்கும் மகத்தான சக்தியும் இதுவேயாகும்" இது தலைவர் அவர்கள் முன்பு கூறிய கூற்றொன்று.

இப்பொழுது கொசோவோ சிக்கலையடுத்து இராசதந்திர உலகிலே தோன்றியுள்ள குழப்ப நிலையை இக்கூற்றோடு பொருத்திப்பார்க்கலாம். ஒரே ஒரு நலம், அதுவே தன்னலம் என்று செயற்படும் இராசதந்திர உலகில் வெடிப்பொன்று அண்மையில் தோன்றியுள்ளது. சருவதேசமெங்கும் தமிழ் மக்கள் பேரணிகள், வெண்டுகைகள், சருவதேச கணனிவலைப் பின்னல்கள், மின்னியல், அச்சு ஊடகங்கள், மனித உரிமைகள் அமைப்புக்கள் மூலம் எழுப்புவது ஒரேயொரு வினா மட்டுமே. கொசோவோவிற்கு ஒரு நீதி? எமக்கொரு நீதியா? அங்கு இனப்படுகொலை புரியும் சேர்பியர் மீது குண்டுமழை. இங்கோ தமிழர் மீது குண்டுமழை பொழிந்து இனப்படுகொலை புரியும் சிங்களவருக்கு உதவி. எத்தகைய கபடத்தனம்? இரட்டை வேடம்? கேள்வி இது. இது தெரிந்த உண்மை தான். புரிந்த விடயம் தான். ஆனால் இது வலியுறுத்தப்படும் காலம் மிகப் பொருத்தமானது. ஏனெனில் போராடிக் களைத்து இளைத்துவிட்ட பாலஸ்தீனம் பேச்சுவார்த்தைக் கடலில் மூழ்கியெழுந்தும் பயனற்ற நிலையில் வேறுவழியின்றி சுதந்திர நாடாகத் தன்னைப் பிரகடனப்படுத்த எடுக்கும் முயற்சிகளுக்கு உலக ஆதரவு பெருகிச் சேரும் நேரம் - வெகுவிரைவில் கிழக்குத் தீமோரின் தலைவிதியை தீர்மானிக்கும் பொறுப்பை அம்மக்கள் கையிலே உலகம் ஒப்படைக்கப் போகும் காலம்.

எனவே தான் கொசோவோ விடுதலைப்போராட்டம் அதனை மேற்குலகம் கையாளும்முறை, அதற்கு வைக்கப்படப்போகும் தீர்வு என்பன என்றுமில்லாத அளவு உலகின் கவனத்தைப்பெறுகின்றன. உலகம் பிறந்ததே அமெரிக்காவிற்கு பயன்படத்தான் என இராசதந்திர நியாயம் கற்பித்த அமெரிக்க முன்னாள் இராசதந்திரி ஹென்றி கிஸிங்கர் தானுமொரு கேள்வியை இப்பொழுது எழுப்புகின்றார்.

இதுவென்ன அமெரிக்க நீதி? அங்கொரு நீதி? இங்கொரு நீதி? கொசோவோ அல்பேனிய இன மக்கள் படும் அளவற்ற துயரம் தான் அங்கு தலையிடுவதற்கான பிரதான காரணமென்றால் கொசோவோவை விடவும் மிகவும் அதிகமாகவும் பலகாலம் தொடர்ந்தும் இன்னல்களை அனுபவிக்கும் ஏனைய நாடுகளில் (ஸ்ரீலங்கா உட்பட) ஏன் தலையிடவில்லை என்கிற பிரச்சனை கேள்வி எழுகின்றதே என்று இக்கட்டான கேள்வியொன்றை அமெரிக்க நிருவாகத்திடம் எழுப்புகின்றார் கிசிங்கர்.

இவ்வாறாக சருவதேச அரசியல் அரங்கிலே விடுதலைப்போராட்டக் குரல்கள் முதன்மைபெறும் வேளை, விடுதலைப் புலிகளின் வீரம் செறிந்த அண்மைக்கால போராட்டங்கள் ஏற்படுத்திய தாக்கங்கள் இப்போது மெல்ல மெல்ல தெளிவாகின்றன. பயங்கரவாதப் பட்டம்சூட்டி, தீண்டத்தகாத இயக்கமாக்கி முற்றிலுமான செய்தித்தடையை முழு உலகளவில் விதித்து தமிழ்மக்களின் போராட்டம் தொடர்பாக உலகம் சாதித்த மௌனம் மெல்ல மெல்ல கலைகின்றது. இதுவொரு புதிய பரிமாணத்தைக் காட்டுகின்றது. மார்ச் 08ம் திகதிய அமெரிக்க டைம் ஏட்டில் இராசதந்திரம் விடுதலைப் போராளிகள் எனும் தலைப்பிலான பிரதான கட்டுரையொன்றில் புலிகள் உரிய கவனத்தைப் பெற்றிருந்தார்கள். ஏப்ரல் மாத 15ம் திகதிய நியூஸ்வீக் இதழில் ஸ்ரீலங்கா தொடர்பான வெளியான விரிவான செய்திக்கட்டுரையின் மையமாக புலிகளேயிருந்தனர். ஸ்ரீலங்காவின் இன்றைய இழிவான சமூக, பண்பாட்டு நிலை, வீழ்ச்சியடையும் பொருண்மியம், முதலிடத்தயங்கும் அந்நிய முதலீட்டாளர் போன்ற பல செய்திகளை



உள்ளடக்கிய இதன் தலைப்பு "பேரின் நரகத்தில் தொலைந்த நாடு" என்றிருக்கின்றது. இதே வேளை Himal எனும் தென்னாசிய அரசியல் செய்தி இதழின் ஏப்ரல் வெளியீடு, ஸ்ரீலங்காவின்போர் தொடர்பான சிறப்பு இதழாக வெளிவந்துள்ளது. இறப்பின் தொகையில், அழிவில், இடம்பெயர்வின், தாங்கமுடியாத துயரத்தின் அளவில் இந்த நூற்றாண்டின் மிகமோசமான இனப்பிணக்குள்ள நாடு ஸ்ரீலங்கா எனக்கூறும் இவ்விதழ் கொடுத்துள்ள தலைப்பு "முடிவற்ற போர்."

நாலுவருட முடிவில் நட்டாற்றில் நிற்கும் சந்திரிகாவிற்கு இவையெல்லாம் இனிப்பான செய்திகளாக இருக்க முடியாது. எனவே நீண்டகாலம் கொசோவோ விடயத்தில் அமைதி காத்த அம்மையார், கதிர்காமரின் வெளிவிவகார அமைச்சுக்கூடாக அறிக்கையொன்றை வெளியிட்டார். ஐ.நாவின் சாசனங்களுக்கு அமைவாக ஐ.நாவின் முன்னிலையில் கொசோவோ விடயத்தில் செயற்படுவதே நல்லது.

நாடுகளின் இறைமை, பிரதேச ஒருமைப்பாடு என்பன கணக்கிலெடுக்கப்பட வேண்டும் என அமெரிக்காவிற்கு மெல்லிய குட்டு வைக்கும் இவ்வறிக்கையில் புலிகளையும் கதிர்காமர் இழுக்கின்றார். கொசோவோவில் நடப்பதுபோல் கொசோவோ செயற்பாடுகள் புலிகளும் இங்கே மேற்கொள்வதால், தாங்கள் கொசோவோ அட்டூழியங்களை வன்மையாக கண்டிப்பதாக பொருள்படும் வகையில் அறிக்கை வெளியிட்டுள்ளது. கொசோவோவுக்கும் புலிகளுக்கும் என்ன சம்பந்தம்? சேர்பியரோடு புலிகளை சம்பந்தப்படுத்தி மறைமுகமாக கதிர்காமர் அறிக்கை விடுவதன் நோக்கம் என்ன? கொசோவோவில் மேற்குலகத் தலையீடு, அதுதொடர்பான தாக்கங்கள் இன்னொரு சேர்பியராக செயற்படும் சிங்களவருக்கு கொடுத்த அச்சத்தின் விளைவு தான் இச் சொதப்பல் அறிக்கை. பேரினவாத பேயாட்டம் போடும் சேர்பியருக்கும், சிங்களவருக்கும் எந்தவித வேறுபாடுமில்லை. கொசோவோ சிக்கலின் பின்னணியே பழம்பெரு வரலாற்று கற்பிதங்களிலிருந்து சேர்பியர் மீளாதிருப்பதே. மகாவம்ச மாயையில் தம்மைத் தொலைத்த சிங்களவர் நிலையும் இதை ஒத்ததே.

ஏனெனில் 1918 ம் ஆண்டளவில் முதலாம் உலகப்போரின் பின் உருவான யூகோசிலாவியா இன்று எம் கண்முன்னே சிதறி மறையும் வித்தையை நிகழ்த்தும் சக்தி எது என்பதை அறிய சேர்பியருக்கும் சிங்களவருக்கும் இயலவில்லை. ஆஸ்திரிய கங்கேரிய இராய்ச்சியத்தின் பகுதியாகவிருந்த சிலோவேனியா, குரோசியா, பொசுனியா, கசகோவினா போன்றவற்றை அப்போது சேர்பியா மொன்ரிநீக்ரோ இராய்ச்சியங்களின் மன்னராகவிருந்த சேர்பிய மன்னரான அலெக்சாந்தர் கரயோவிடிச் இணைத்து ஒரு நாடாக்கினார். சருவாதிகாரியான இவர் செய்த பிரதான வேலை புதிய நாட்டில் இராணுவம், காவல்துறை, நீதித்துறை போன்றவற்றில் சேர்பிய இனத்தாரின் மேலாதிக்கத்தை ஏற்படுத்தியதே. தனது கொடுமையான போக்கிற்குப் பரிசாக அவர் 1935 ஆம் ஆண்டு கொலை செய்யப்படுகின்றார். இதையடுத்து இரண்டாம் உலகப்போரின் போது இட்லரின் தலைமையிலான அச்சநாடுகள் (Axis Powers) படை யூகோசிலாவியாவை ஆக்கிரமிக்கின்றன. இதற்கு எதிராக யோசப் டிட்டோ தேசபக்த இயக்கமொன்றை கட்டியெழுப்பி போரிடுகின்றார். சோவியத் படை ஈற்றில் இட்லரின் படைகளை வெளியேற்றியது. அதற்கு டிட்டோ உதவியதற்கு பதிலாக சோவியத் யூகோசிலாவியாவை டிட்டோவிடம் ஒப்படைத்துச் செல்கின்றது.

மார்சல் டிட்டோ வித்தியாசமான தலைவர் 1946இல் புதிய யூகோசிலாவியாவை மக்கள் குடியரசாக பிரகடனம் செய்து பல்வேறு இனத்தாருக்கு சுயாட்சி தன்மையான அதிகாரங்களை பிரித்துக் கொடுத்து சமதரும பாதையில் ஆள முயல்கின்றார். எனினும் சேர்பிய மேலாதிக்கம் நீடித்தது. யூகோசிலாவியாவின் ஏனைய பகுதிகளில் தேசிய உணர்வு தலை தூக்கியது. ஈற்றில் டிட்டோவின் வீழ்ச்சிக்கும் இதுவே வழிகோலியது. குரோசியா சிலோவேனியா போன்றவை சேர்பிய ஆதிக்கத்திலிருந்து விடுபட்டுத் தனிநாடாக முயன்றன. கொசோவோ வாழ் முஸ்லீமியர் தம்மை அல்பேனியாவோடு இனங்காட்டி இஸ்லாமிய தேசியவாத உணர்வினை தம்மில் வளர்க்கலாயினர். இக்கட்டத்திலே 1980இல் டிட்டோ இறக்கின்றார். இதைத்தொடர்ந்து தேசிய இன உணர்வினான எழுச்சிகள், அமைதியின்மையை அங்கு தோற்றுவிக்கின்றன. இக்கட்டத்திலே சேர்பியரின் பெருந்தேசியவாதக் கனவை நனவாக்கப் போவதாகக் கூறி சிலோபடான் மிலோசவிச் 1989 இல் பதவி ஏற்கின்றார். கொடிய

**வே. பாலகுமாரன்**

இராணுவ அடக்குமுறையை கையாண்டு இனச்சுத்திகரிப்பை மேற்கொண்டு அகன்ற சேர்பியாவை உருவாக்க அவர் எடுத்த முயற்சி 1990களில் படுதோல்வியைச் சந்திக்கின்றது. யூகோசிலாவியா சிதறியது. சிலோவேனியா குரோசியா, மசிடோனியா, பொசுனியா என்பன விடுதலையுணர்வின் எழுச்சிக்கு சான்றாகின. இப்பொழுது மிலோசவிச்சிடம் மிஞ்சியிருப்பது கொசோவோ மட்டுமே.

1992 ஏப்ரலில் எஞ்சியிருந்த சேர்பியாவையும் மொன்ரிநீக்ரோவையும் இணைத்து இன்றைய யூகோசிலாவியா குடியரசாக பிரகடனம் செய்த மிலோசவிச் கொசோவோ மீது பாய்கின்றார். அதனுடைய தனித்த அதிகாரங்

(11ஆம் பக்கம் பார்க்க)

# வெற்றிடம்

கிளிநொச்சி ஒரு இராணுவ பூதம். எப்போதும் தாக்கப்பட்டு அழிக்கப்பட முடியாது என இறுமாந்திருந்த தளம். 1998, 27 நள்ளிரவு தாண்டிய சிலமணியின் பின்னர் தடைகளை உடைத்தன புலிகளின் அணிகள்.

இது ஒரு நன்கு திட்டமிடப்பட்ட தாக்குதல். "எம்மீது அவலத்தை விதைத்தவனுக்கே அதைத் திருப்பிக் கொடு" என்ற தலைவரின் கருத்திற்கேற்ப மக்களை இடம் பெயரவைத்து காடுகளில் பட்டினியால் மழையில் அலைய விட்டவனை எம் நிலத்தில் இருந்து துடைத்தெறிந்த சமர்.

பல அணிகள் பங்கேற்ற இச்சண்டையில் முரளியின் தலைமையில் சென்ற அணியின் பணி சற்று முக்கியத்துவமானது; கடினமானது. முகாமைத்தாக்கி அழிக்கும் திட்டத்தில் அந்த முகாமிற்குக் கிடைக்கப்போகும் உதவிகளைத் தடுப்பதென்பது முக்கியமானது. குறைவான எம்பலத்தை வைத்துக்கொண்டு எம் தாக்குதல் தந்திரோபாயங்களாலும், எம் போராளிகளின் உறுதியாலும் மட்டுமே எதிரியின் முகாமை அழிக்கத் திட்டமிடப்பட்டது.

கிளிநொச்சித்தளத்திலிருந்து பிரிகேட்டிற்கு பரந்தன் தளத்திலிருந்து கிடைக்கும் உதவியைத் தடுப்பதற்கான அணியை வெற்றிகரமாகச் செயற்பட வைக்கும் பணி அவர்களுடையது.

சண்டை தொடங்கி சிட்டதிலிருந்து எதிரி கடுமையான எதிர்ப்பை கொடுத்துக்கொண்டிருந்தான். எதிரியின் நடைப்பொறியமைப்பில வைத்து எம்மைக்கண்டு கொண்டதால் எதிரி முந்திக்கொண்டான. எமக்கோ முகாமின் உள்ளே நுழைவதற்குப் பாதை இல்லாத நிலை. எம்மால் ஊதப்பாதை உடைக்கப்படாவிடின், எது நிகழும்?

விடமுடியாது. உதவியைத் தடுக்கும் அணிகள் தம் பணியைச்செய்யாது விட்டால் அன்றைய சண்டையில நடக்கப்போவது என்ன? அதை முரளியின் அணியில் எல்லோரும் உணர்ந்திருந்தனர்.

அணிகள் முரளியால் மீள ஒழுங்கமைக்கப்பட்டு, மீண்டும் தடைகளை உடைப்பதற்காக எதிரிமீது உக்கிரமான சண்டை நிகழ்ந்தது. சில காப்பரண்கள் கைப்பற்றப்பட்டுவிட்டன. இன்னும் சில காப்பரண்கள் மட்டுமே பிடிக்கப்பட வேண்டிய நிலையில் இருந்தன. பிடிக்கப்பட்ட அரண்களிலிருந்து பிடிக்கப்படாத இடங்களுக்கு அணிகள் அனுப்பப்பட்டன.

## வீரத்தின் வித்துக்கள்

அணிகளை ஒழுங்குபடுத்தி அனுப்பிக்கொண்டிருந்த முரளியின் காலடியில் திடீரென மிதிவெடியொன்று வெடித்தது. எதிரியின் கடுமையான எதாப்பின் மத்தியில் நிலத்தோடு நிலமாக ஊர்ந்து முன்னேறிக்கொண்டிருந்த முரளியின் முழங்கால்களை வைத்த இடத்தில் மிதிவெடி வெடித்தது. இரண்டு கால்களும் துண்டாடப்பட்டு சிதறிப் போயின. உரண்டுகால்களும் துண்டாடப்பட்ட நிலையில் இரத்தமயமாய் இருந்த முரளியை பின்னர் காவுகுழுவினர் களமெடிசினுக்கு எடுத்துச் சென்றனர்.

பின்னர் நடந்ததைப்பற்றி கூடநின்ற போராளி கூறுகின்றான. "நாங்கள் மீண்டும் ஒரு தாக்குதலைத் தொடுத்து தடைகளைத்தாண்டி உள்ளே நுழைந்து கொண்டிருந்தோம். எம்மை ஒழுங்குபடுத்தி அனுப்பிக்கொண்டிருந்த முரளி அண்ணாவின் காலடியில எதிரி விதைத்த மிதிவெடியொன்று திடீரென முழங்கியது. நாம் கடக்கவேண்டிய பாதையை ஊகிமுனையில் நடப்பதாய் உணர்ந்தோம். இருமி பிசகினாலும் வெடிக்கத்தயாராகவிருந்த கண்ணிவெடி வயல்களினூடு நாம் நகர்ந்துகொண்டு இருந்தோம். முரளியண்ணா காயப்பட நாம் அணியின் உபதலைவனின்கீழ் காவல் அரண்களை தொடர்ந்து கைப்பற்றிக்கொண்டிருந்தோம். திடீரென



மயிர்க்கூச்செறியும் ஒரு தியாகத்தின் முடிவில் அன்பழகன் முன் மண்டியிட்ட அழிவியந்திரம்.

ஒரு மணித்தியாலத்தின் பின் வோக்கி எம்மைக் கூப்பிட்டது. அது முரளியண்ணாவின் குரல். எப்படி....? எமக்கு ஆச்சரியமும் அதிர்ச்சியாகவும் இருந்தது. வோக்கியில் அவரின் குரல் களைத்திருந்தது. ஆனால் உறுதியாய் இருந்தது.

'மச்சான் என்னைப்பற்றிக் கவலைப்படாதேங்கோ. எங்கடபகுதியை பிடிச்சுக்கொடுங்கோ. அது போதும்' வோக்கியில் கூப்பிட்ட முரளி அண்ணாவின் குரல் இப்படித்தான் சொன்னது. பின்னர் எங்களோடு நின்று காயப்பட்டுச்சென்ற போராளி சொன்னான். "கள மெடிசினில் முதன் முதல் மயக்கம் தெளிந்த முரளி தனது வோக்கியைக் கண்டுவிட்டு எடுத்து தனது அணியுடன் கதைத்தான். ஆனால் இன்னும் ஒருமுறை கதைப்பதற்கோ,

அங்கே களத்தில் உள்ள நிலைமையை அறிவதற்கோ முரளியின் உடலில் உயிர் இருக்கவில்லை."

இரண்டு கால்களும் இழந்த நிலையில் மரணத்தின் விழிம்பிலும், வேதனையின் உச்சத்திலும் இருக்கக்கூடிய அவன் உயிர், மயக்கம் தெளிந்ததும் 'ஐயோ' என கத்தவில்லை. தன் அணியை உற்சாகப்படுத்தும் உறுதியிலிருந்தது. அந்த உன்னதமான உயிரின் உணர்வுகள் எத்தனை அற்புதமானவை. அசாத்தியமான அவனின் உறுதி அவ்விடத்தில் அந்நேரத்தில் ஒரு சம்பவம்தான். ஆனால் எமது சரித்திரத்தில் அது ஒரு பதிவு.

**- அன்பு -**

"ஒரு போரின் வெற்றியை தீர்மானிப்பது ஆட்பலமோ - ஆயுதபலமோ அல்ல. அசைக்கமுடியாத மனவுறுதியும், வீரமும், விடுதலைப் பற்றுமே வெற்றியை நிர்ணயிக்கும் குணாம்சங்கள்" என்ற தலைவனின் உணர்வுகளை உள்ளத்தில் சுமந்து வாழ்ந்த இலட்சிய வீரன் இவன். இவனதும் இவன்போன்ற புலிவீரர்களினதும் உறுதிதான் தமிழீழத்திற்கான தடைகளின் வெட்டுவாள்கள்.

* * *

ஜெயசிக்குறுய் படைகள் தம் நடவடிக்கை தொடங்கி ஓராண்டை அண்மித்துவிட்ட நேரமது. வெற்றி நிச்சயம் என வந்தவர்களின் வெற்றிகள் கேள்விக்குறியான காலமது. இராணுவம் தேடியது ஒரு உடனடி வெற்றியையே. இராணுவத்தை பகடையாக்கிவிட்ட அரசிற்கு வேண்டியது ஒரு வெற்றிச் செய்தியே. அரச படைகளை எம்நிலைகள் நோக்கி ஏவிவிட எம்மிடம் அடிவேண்டி படைகள் பின்புறமும் ஓடமுடியாமல் திண்டாட, மீண்டும் மீண்டும் ஒரு இராணுவ வெற்றியை அரசியல் தேவைக்காகக் காட்ட அவர்கள் முயன்றனர்.

(09 ஆம் பக்கம் பார்க்க)



www.eelamview.com

www.eelamview.com



# போர் எந்தக்கட்டத்தில் உள்ளது!

வன்னிப் பெருநிலப்பரப்பில் சிங்களப்படை, அகலக்கால்பரப்பி நிலம் விழுங்கிவரும் இந்தக் கட்டத்தில் தமிழீழ மக்கள் அனைவரும் விளக்கம்பெற விரும்பும் வினா இது. போர் எந்தக் கட்டத்தில் உள்ளது?

போரில் அரசபடைகள் வெற்றிவாகை சூடி வருவதாக, சந்திரிகா அரசாங்கம் மார்தட்டி வருகின்றது. சிங்களப்படைகள் கைப்பற்றியுள்ள தமிழர் நிலங்களை இராணுவ அளவுகோலாகப் பயன்படுத்தவிரும்பும் அனைவரும் சந்திரிகா அரசாங்கத்தின் வெற்றிக்கோசத்தை ஆமோதித்து தலையாட்டுகின்றனர்.

எனினும், மரபுசாராத வகையில் சிந்திக்கும் வரலாற்றுப்பிரக்ஞையுடைய ஆய்வாளர்கள் வேறுவிதமாக எதிர்வுகூறுகின்றனர். போரில் திருப்புமுனைகள் நிகழப்போகும் இராணுவப் பிரளயத்திற்குள் போராட்ட வண்டி நுழைந்துள்ளது என்று அவர்கள் பிரகடனம் செய்கின்றனர்.

அரசியல் ரீதியாகவும் - இராணுவ ரீதியாகவும் புலிகள் தமது பலத்தை பலமடங்காகப் பெருக்கிக்கொள்ளும் வரலாற்று வாய்ப்பை சந்திரிகா அரசாங்கம் புலிகளுக்கு வழங்குகின்றது என அவர்கள் ஆருடம் கூறுகின்றனர்.

கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த - முக்கியத்துவம் அற்ற என்ற பேதமில்லாமல் புலிகளின் வசமிருந்த எல்லாவகை நிலத்தையும் ஆக்கிரமிக்கும் ஒரு போர்த்திட்டத்தை படையினர் நடைமுறைப்படுத்தி வருகின்றனர். இதன்மூலம், புலிகளை ஒருபகுதிக்குள் அடைத்து - அரிகளை நசுக்கி - அழிக்கும் புல்டோசர் போர்த்திட்டத்தை சிங்களப் படைகள் கடைப்பிடிக்கின்றன.

புலிகள் வசமுள்ள நிலத்தினது விஸ்தீரணத்தைக் குறைக்கக் குறைக்க, புலிகளின் இராணுவபலமும் குறைந்துகொண்டு போகும் என்ற பொதுமகனின் எதிர்பார்ப்புடன்படைத்தலைமை இந்த புல்டோசர் திட்டத்தை அமுல்படுத்துகின்றது.

ஆனால், படைத்தரப்பின் இந்த இராணுவ சித்தாந்தத்திற்கு முரணாக அனைத்துத்தரப்பினரும் வியக்கும் வகையில் புலிகளின் இராணுவ பலமும் - போரிடும் திறனும் வளர்ந்துவருகின்றது.

ஆனாலும், பேரினவாதக் கலங்களால் ஆக்கப்பட்டுள்ள சந்திரிகா அரசாங்கத்தின் மூளை, மேற்குறித்த புறநிலை உண்மைகளை கிரகிக்க மறுக்கின்றது.

ஒரு விடுதலைப்போராட்டத்திற்கு வீரியம் சேர்க்கும் அரசியல்-இராணுவ மற்றும் உளவியல் காரணிகளை, பெரும்பாலான, மரபுசார் இராணுவ ஆய்வாளர்கள் கருத்திலெடுப்பதில்லை. இத்தகையவர்கள் கூறும் இராணுவ எதிர்வுகூறல்கள் தோல்விகண்டுகொருவதற்கு பல உதாரணங்கள் உண்டு.

ஆட்தொகை- ஆயுதபல தராசுகளில்வைத்து அளந்து- முடிவுகூறமுடியாத புதிரான அம்சங்களை விடுதலைபோராட்டங்கள் கொண்டிருக்கின்றன.

யூதமக்கள் இஸ்ரேயில் என்ற நாட்டை 1948 இல் பிரகடனப்படுத்தியபோது சுற்றியிருந்த அரபுநாடுகள் அந்தப் புதியதேசம்மீது போர்ப்பிரகடனம் செய்து- அதை ஆக்கிரமிக்க நாலாபுறத்திலிருந்தும் தமது படைகளை நகர்த்தின.

அந்தவேளையில், இரண்டாம் உலகப்போர் நாயகர்களில் மிகமுக்கியமானவரான இங்கிலாந்தின் படைத்தளபதி மொன்ற்கோமரி, அரபுப்படைகளின் ஆட்பலம் மற்றும் ஆயுதவளங்களை யூத விடுதலைபோராளிகளுடன் ஒப்பிட்டுவிட்டு அரபுக்கள் வெல்வது உறுதி என்று எதிர்வு கூறியிருந்தார். ஆனால், பென்கூரியன் தலைமையிலான யூத விடுதலைப்படை நடாத்திய வீரம் செறிந்த மக்கள்போராட்டத்தின் மூலம் வெற்றியைப்பெற்று-வரலாற்றுச்சாதனை படைத்தது.

மொன்ற்கோமரியின் மரபு ரீதியான இராணுவ சிந்தனை பொய்த்துப்போனது. அன்றையநிலையில், இஸ்ரேயிலில் இருந்த யூதமக்களின்மொத்த எண்ணிக்கை வெறும் ஏழு இலட்சம். அதன்மீது படையெடுத்துவந்த ஐந்து அரபுநாடுகளின் மொத்தமக்கள்தொகை மூன்று கோடியே இருபது இலட்சம். குழந்தைகள் மற்றும் இயலாத முதியோர் நீங்கலாக யூதர்கள் ஒட்டுமொத்தமாக ஆயுதமேந்தினர். அதன்மூலம் ஐந்துநாட்டு அரபு இராணுவத்திற்கு இணையாக ஆட்பலத்தைப் பெற்றனர். புலம்பெயர்ந்து வாழ்ந்த யூத மக்களின் அனுசரணையுடன் பெற்ற ஆயுதங்களைக்கொண்டு படையெடுப்பை முறியடித்து தாம் நிறுவிய புதிய அரசை பாதுகாத்தனர்.

இதேபோன்று, இரண்டாம் உலகப்போரின் போது நிகழ்ந்த ஸ்டாலின் கிராட் மற்றும் லெனின் கிராட் முற்றுகைப்போர்களை மரபுரீதியான இராணுவ சிந்தனைகளுக்கெதிரான முடிவுகளைத்தந்த போர்களுக்கு உதாரணங்களாக மேற்கோள் காட்டலாம்.

சோவியத்யூனியனின் மாபெரும் நிலப்பரப்பை கைப்பற்றிக்கொண்டு முன்னேறிச் சென்ற ஹிட்லரின் நாஜிப்படைகள் ஸ்டாலின் கிராட், லெனின் கிராட் நகரங்களைக் கைப்பற்றமுயன்றன. அந்த நகரங்களைத் தமது படையான செஞ்சேனையினருடன் இணைந்து பாதுகாப்பதென நகரமக்கள் உறுதியெடுத்தனர். நகர்களின் ஒவ்வொரு வீடும் - வீதியும் செஞ்சேனையின் அரண்களாகின. சோவியத் அரசின் பொருண்மியவளம் போராயுதங்களைத் தருவிக்க பயன்பட்டது. சோவியத்தின் மைந்தர்கள் உருக்குறுதியுடன் - களத்தில் நின்றனர். அரண்களை உடைத்து உட்புக நாஜிப்படைகள் செய்த அனைத்து முயற்சிகளும் பிசுபிசுத்தன. நாஜிகளை மேலும் முன்னேறவிடாது தடுத்ததுடன் - நகர்ந்துவந்து நிலம்பிடித்த ஹிட்லரின் படைகள்மீது வலிந்ததாக்குதல்களைத் தொடுத்து நாட்டு எல்லையை விட்டு விரட்டியடித்தனர். இங்கேயும் ஹிட்லரினதும் அவரது தளபதிகளினதும் மரபுரீதியான இராணுவக் கணிப்புகள் பொய்த்துப்போயின.

நிலம்பிடித்து - நகரும் ஒரு ஆக்கிரமிப்புப் படைக்கெதிரான சமரில் குதித்த விடுதலைச் சேனையுடன் அதன் மக்களும் ஒன்றிணைந்து களம்புகும்போது விடுதலைச்சேனை போரில் வெற்றியைப் பெற்றுக்கொள்கின்றது.

வீரியம்பெற்ற விடுதலைப்போராட்டங்களுக்கு இருக்கின்ற தடுக்கமுடியாத ஒரு சாதக அம்சம் இதுவாகும். இத்தகைய தகைமையைக் கொண்டிருந்த யூதரின் விடுதலைச்சேனையும் - சோவியத்தின் செஞ்சேனையும் இறுதிக்கட்டத்தில் - வெற்றிக்கனி பறித்ததை வரலாறு காட்டுகின்றது.

தமிழீழ விடுதலைப்போராட்டம்- இன்றைய நிலையில் - உலகின் முன்னணியில் நிற்கும் ஒரு ஆயுதப்போராட்டமாகும். புலிகள் இயக்கத்தின் வீரியமும் - போரிடும் ஆற்றலும் உலகப்புகழ் பெற்றவை. புலிகளின் சண்டைத்திறனை எதிரி கூட மறுக்கமாட்டான்.

ஸ்ரீலங்காப்படைகளின் பெரும்பகுதி வன்னிக்களத்திற்கு அனுப்பப்பட்டபின்பும் தாம் நினைத்தபடி நகர்ந்து நிலம் பிடிக்க அவற்றினால் முடியவில்லை. புலிகள் இயக்கத்திடம் உள்ள ஆட்பற்றாக்குறையை இயன்றவரை பயன்படுத்தி நிலம் விழுங்க படைத்தரப்பு முயல்கின்றது.

இன்றைய நிலையில், தேவையான ஆட்தொகையையும் அந்த ஆளணியை போரில் ஈடுபடுத்தத் தேவையான பொருண்மியத்தையும் புலிகள் இயக்கம் பெற்றுக்கொள்ளுமாயின், யூத சேனை வரலாற்றுச்சாதனை படைத்ததுபோல, சோவியத்படை நாஜிகளுக்கு தோல்வியைபரிசளித்ததுபோல, புலிப்படையும் களத்தில் பெரு வெற்றியீட்டி சிங்களப்படைகளை எல்லைவரை விரட்டியடிக்கும். ⊙

- எல்லாளன் -



புலிகள் இயக்கத்தின் வீரியமும் போரிடும் ஆற்றலும் உலகப்புகழ் பெற்றவை.



www.eelamview.com

www.eelamview.com



# எங்கள் பட்டினிக்கு பதில் என்ன?
# 200 நாள் தொடரும் உண்ணாவிரதம்



தமிழ் மக்களை ஸ்ரீலங்காவின் பிரஜைகளாகக் காட்டி சர்வதேசத்தின் முன் தமிழர்களின் விடுதலைப்போராட்டத்தை அர்த்தமிழக்கச் செய்வதில் சிங்களத்தின் ஒவ்வொரு ஆட்சியாளர்களும் முனைப்புடன் செயற்பட்டனர். தமிழர்களின் பொருளாதார வலுவை அழித்து அவர்களை சிங்கள தேசத்தில் தங்கி வாழச் செய்யும் தங்குநிலைப் பொருளாதாரத்தை ஏற்படுத்தி தமிழர்களை தாம் விரும்புவது போல் ஆக்கிவிட சிங்களம் விரும்புகின்றது. அதற்காகவே தமிழர்களின் பாரம்பரிய நிலங்களை ஆக்கிரமிப்பது, தொழிற்தடைகளை ஏற்படுத்துவது, (கடல்வலயத் தடைச்சட்டம், விவசாய உள்ளீடுகளுக்கான தடை) உற்பத்திச் சக்திகளைப் புதிதாக உருவாக்காமல் விடுவது, பொருளாதாரத் தடையை தீவிரப்படுத்துவது போன்றவற்றை தமிழ்ப்பிரதேசங்களில் நீண்டகாலமாக சிங்கள அரசுகள் நடைமுறைப்படுத்தி வருகின்றன. இவை எல்லாவற்றையும் யுத்தத்தின் தவிர்க்க முடியாத நடைமுறைகளாகக் காட்டிக்கொண்டு கண் துடைப்பதற்கான நிவாரணக் கொடுப்பனவு நடைமுறையை தமிழர் பிராந்தியங்களில் வைத்திருந்தது. இந்த வகையில் தமிழ் மக்கள் "எங்களுடைய மக்கள்" என்பதுபோல் உலகின் முன்னால் எமது மக்களின் துன்பங்களுக்காக கண்ணீர் வடிப்பதுபோல நடித்துவரும் சந்திரிகாவின் உண்மை முகத்தை 07.07.98 முதல் நிவாரண வெட்டைக் கண்டித்து வன்னித் தமிழ்மக்கள் நடாத்திவரும் சாத்வீகப் போராட்டங்கள் உலகிற்கு அம்பலப்படுத்தி இருக்கும்.

"உணவு இன்றேல் அரச அலுவலகங்கள் எமக்கு எதற்கு" என்ற கோசங்களுடன் 30.07.1998 முதல் வன்னியில் உள்ள சகல அரசாங்க அதிபர், உதவி அரசாங்க அதிபர் செயலகங்கள் முன்னால் மறியல் போராட்டங்களை நடாத்தி, அவற்றை சுமார் ஒரு மாதங்களுக்கும் மேலாக செயலிழக்கச் செய்த மக்களுக்கு சந்திரிகா அரசு எந்தவொரு பதிலையும் தராது பாராமுகம் காட்டியது. மக்களின் பிரச்சனைக்குத் தீர்வு கேட்ட மக்கள் அமைப்புகளின் பிரதிநிதிகளோடு அரச அதிபர்கள் "நிவாரணம் ஏன் வெட்டப்பட்டது என்ற காரணத்தை அரசாங்கம் எங்களுக்கு கூறவில்லை. வெட்டுவதற்கான எந்தச் சிபார்சையும் அரசு எங்களிடம் பெறவில்லை. இந்நடவடிக்கையை அமுல்படுத்துமாறு நாங்கள் பணிக்கப்பட்டுள்ளோம். எங்களால் மீள்பரிசீலனை செய்வதென்பது அரசுடன் கதைத்த பின்னரே சாத்தியமாகும்" என்ற பதிலையே திரும்பத் திரும்ப சொல்லிக்கொண்டு இருந்தனர்.

"தமிழ் மக்கள் ஸ்ரீலங்காவின் பிரஜைகள்" என்று போலிக் குரலெழுப்பும் சந்திரிகா அரசு தமிழ் மக்களின் கோரிக்கைகளுக்கு என்ன பதிலளித்தது? தனது பிரதிநிதிகளான அரச அதிபர்களுடன் கலந்தாலோசிக்காது, அவர்களின் சிபாரிசுகளைப் பெற்றுக்கொள்ளாது, மக்கள் பெற்றுவந்த நிவாரண உதவியை எந்தவித காரணங்களும் இல்லாது ஈவிரக்கமின்றி வெட்டித்தள்ளிய அரசு, மக்கள் அனுப்பிய மகஜர்களுக்குக்கூட பதிலளிக்காது மௌனம் காத்து வருகிறது. அரசிடம் இருந்து பதிலை எதிர்பார்த்தபடி அரச அலுவலகங்களின் முன்னால் உண்ணாவிரதம் இருந்து தம் பட்டினியின் முடிவிற்காக காத்திருந்த மக்களின் போராட்டத்தை சந்திரிகா அரசு இதுவரை கணக்கிலெடுக்கவில்லை. 1961 ஆம் ஆண்டு யாழ் கச்சேரியில் 21 நாட்களாக "நீதிமன்ற மொழி மசோதா"விற்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடாத்திய தமிழ் மக்களின் போராட்டத்தை, அவர்கள் மீது இராணுவத்தை ஏவி விரட்டியடித்தது சந்திரிகாவின் தாயாரின் அரசு. இன்று அச்செயற்பாட்டைச் செய்வதற்கு இந்தப்பகுதியில் இராணுவத்தின் இருப்பு இல்லாமல் இருந்ததே சந்திரிகாவிற்கு பெருங் குறையாக இருந்திருக்கும்.

**- அ. தீபன் -**

சுமார் ஒருமாதம் வரை அரசுக்கெதிரான ஆர்ப்பாட்டங்களில் எந்த ஒரு சாதகத்தன்மையையும் கண்டுகொள்ளாத மக்கள் தொடர்ந்தும் அரசுக்கு எதிரான போராட்டங்களில் பயனில்லை என்பதை உணர்ந்து கொண்டனர். "நாங்கள் உணவு இன்றிப் பட்டினியால் சாவதை சிங்கள அரசு விரும்புகிறது. எங்களைப் பட்டினிச்சாவில் இருந்து காப்பாற்ற மனித நேயத்துடன் உதவுங்கள்" என சர்வதேச தொண்டர் நிறுவனங்களின் பிரதிநிதிகளிடம் கேட்டுக்கொண்டு அவர்களின் அலுவலகங்களின் முன்னால் உண்ணாவிரதப் போராட்டங்களை நடாத்தினார்கள்.

"நாங்கள் உங்கள் உணர்வுகளைப் புரிந்து கொள்கிறோம். ஆனால் எங்களால் உணவு வழங்க முடியாது. நாம் அரசுடன் செய்து கொண்ட உடன்படிக்கையின் படி உணவு தவிர்ந்த ஏனைய உதவிகள் வழங்கிவந்தோம். உணவு வழங்குவது அரசின் பொறுப்பு" எனக் கூறிய தொண்டர் அமைப்புக்களின் பிரதிநிதிகளிடம், "உணவின்றிப் பசியால் சாவினை எதிர்நோக்கும் இந்நேரத்தில் எங்களுக்கு ஏனைய உதவிகள் எதற்கு" என்று கேட்ட மக்கள் இருநூறு நாட்களாக அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலயச் செயலகத்தின் முன்னால் தொடர் உண்ணாவிரதப் போராட்டங்களை நடாத்தி வருகிறார்கள்.

தொடர் இடப்பெயர்வுகளுக்கு உள்ளாகி தொழில் செய்வதற்கான வழிவகைகளையும் இழந்து சிங்களத்தின் இராணுவ நடவடிக்கைகளால் காடுகளுக்குள் தள்ளப்பட்டுவிட்ட மக்களின் இப் போராட்டத்திற்கு முடிவு எப்போது கிடைக்கப்போகிறது?

காலத்திற்குக்காலம் ஸ்ரீலங்கா அரசு தமிழ்ப் பகுதிகளில் செய்து வந்த குடியேற்றங்கள் மற்றும் இராணுவ நடவடிக்கைகள் காரணமாக சொந்த இடங்களில் இருந்து விரட்டியடிக்கப்பட்ட பல்வேறு பகுதிகளையும் சேர்ந்த மக்கள் வன்னிப் பெருநிலப்பரப்பிலேயே குடியேறியிருந்தார்கள். இவை எல்லாவற்றிற்கும் மேலாக சந்திரிகா அரசின் சூரியக்கதிர் நடவடிக்கை காரணமாக யாழ் குடாநாட்டிலிருந்து இலட்சக்கணக்கான மக்கள் இடம் பெயர்ந்து வன்னிப் பெருநிலப்பரப்பில் தஞ்சம் அடைந்துள்ளனர். இந்நிலையில் சத்ஜய, எடிபல, ஜயசிக்குறுய், ரிவிபல, ரணகோஷ போன்ற இராணுவ நடவடிக்கைகள் கிளிநொச்சி, மன்னார், மாங்குளம், ஒட்டுசுட்டான், வவுனியா போன்ற இடங்களில் இருந்தும் மக்களை மேலும் இடம்பெயர வைத்தன.

இவ்வாறு தொடர் இடப்பெயர்வுகளால் அவலங்களைச் சந்தித்த மக்களுக்கு ஸ்ரீலங்கா அரசு எந்தவொரு அடிப்படை உதவிகளையும் செய்து கொடுக்கவில்லை. 'அவசர புனர்வாழ்வு புனரமைப்புத்திட்டம்' ஊடாக சிங்கள தேசத்தில் பேருதவிகளை சிங்கள மக்களுக்குச் செய்து வரும் அரசு, இராணுவத்தால் விரட்டியடிக்கப்பட்டு ஏதிலிகளாய் நிற்கும் இம்மக்களின் பட்டினிக்கு உணவு நிவாரண உதவியைக்கூடச் செய்ய மறுக்கிறது. சிங்களப்பகுதிகளில் ஆயிரக்கணக்கான மில்லியன் ரூபாய்களை வீடமைப்பு கடன்களாகவும், பலநூறு மில்லியன் ரூபாக்களை மானிய உதவித்திட்டங்களுக்காகவும் செலவு செய்யும் அரசு, ஏதிலிகளாக நிற்கும் இந்த மக்களுக்கு ஒரு ரூபாவைத்தானும் இதற்காகச் செலவிடவில்லை.

1997ம் ஆண்டு ஸ்ரீலங்காவின் ஏனைய பகுதிகளில் வீடமைப்புக்காக அரசு செலவிட்ட தொகை அட்டவணை 01 இல் தரப்பட்டுள்ளது.

தொடர்ச்சியான இடப்பெயர்வுகளால் பல பகுதிகளில் இருந்தும் இடம்பெயர்ந்து வந்த லட்சக் கணக்கான மக்கள் வன்னியில் குடியேறிய

| வீடமைப்புத்திட்டம் | செலவு செய்த தொகை (மில்லியன் ரூபா) |
| --- | --- |
| ஜனஉதவ நிகழ்ச்சித்திட்டம் | 142 |
| கிராமிய வீடமைப்புத்திட்டம் | 190 |
| செவன வீடமைப்பு | 118 |
| நகர வீடமைப்பு | 18 |
| இடர் வீடமைப்பு | 04 |
| மீன்பிடி வீடமைப்பு | 10 |

அட்டவணை (1)

குறிப்பு:- இவற்றைவிட வீடமைப்புக்கடனாக 8, 438 மில்லியன் ரூபா வழங்கப்பட்டது.



www.eelamview.com

www.eelamview.com



தால் வன்னியின் நிரந்தரக் குடியிருப்பாளர்களின் வாழ்நிலை கூட பாதிப்புக்குள்ளாகியது. நுகர்வோரின் அதிகரிப்பால் பொருட்களின் விலை பன்மடங்காக அதிகரித்தது. இந்நிலையில் நிரந்தரக் குடியிருப்பாளர்களின் 1500/= ரூபாவிற்குக் குறைவான மாத வருமானம் பெறும் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டு வந்த வறுமை நிவாரணமும் 1996 மே மாதம் முதல் அரசால் நிறுத்தப்பட்டது. இதற்காக சமுர்த்தித்திட்டம் நாடெங்கிலும் நடைமுறைப்படுத்தப்பட்டது. ஆனால் ஏனைய பகுதிகளில் நடைமுறைப்படுத்தப்பட்ட சமுர்த்தித்திட்டத்தை தமிழ்ப்பகுதிகளில் நடைமுறைப்படுத்துவதற்கு அரசு தடை விதித்துள்ளது. ஸ்ரீலங்கா அரசின் இந்தப் புறக்கணிப்பால் வறுமைநிவாரணம் பெற்றுவந்த 65% மக்கள் நினைக்கமுடியாத அவலத்தை அனுபவித்து வருகிறார்கள்.

1996ம் ஆண்டு காலப்பகுதியில் சூரியக்கதிர் -02 நடவடிக்கை காரணமாக வடமராட்சி, தென்மராட்சிப் பகுதிகளில் இருந்து வன்னிக்கு இடம்பெயர்ந்த மக்களை மீண்டும் இராணுவ ஆக்கிரமிப்புப்பகுதிக்குள் இழுக்கும் அரசின் சதி காரணமாக அந்த மக்களுக்குரிய நிவாரணக் கொடுப்பனவுகளை அரசு நிறுத்தியது. அதைத் தொடர்ந்து 1998 மே மாதத்தில் சூரியக்கதிர் மற்றும் சதஜய நடவடிக்கைகளால் இடம்பெயர்ந்த மக்களுட்பட அனைவருக்குமான நிவாரண வெட்டு நடவடிக்கை ஒன்றை எவ்வித காரணங்களுமின்றி அரசு அமுல்படுத்தியது. இதன்காரணமாக நிவாரணம் வழங்கப்படவேண்டிய 1,21,077 பேருக்கு நிவாரணம் வெட்டப்பட்டது. இதன் பின்னர் ஜயசிக்குறுய் நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்த குடும்பங்களையும் சேர்த்து 1,85,574 மக்களுக்கு நிவாரணம் மறுக்கப்பட்டது. இந்த விபரங்கள் அட்டவணை-02 இல் தரப்பட்டுள்ளன.

தற்போது அரசினால் அறிவிக்கப்பட்டுள்ள நிவாரணம் பெறுவதற்கான நிபந்தனையின்படி இடம்பெயர்ந்தவர்களின் மாத வருமானமாக 1500/= ரூபாவிற்குக் குறைவான தொகை பெறுபவர்களுக்கு மட்டுமே நிவாரணம் வழங்கப்படுகின்றது. (வன்னி மக்கள் இதற்கும் கூட புறக்கணிக்கப்பட்டுள்ளனர்) ஸ்ரீலங்கா முழுவதுக்கும் பொதுவானதொரு நடைமுறையாக இருக்கிறது.

அட்டவணை (ii) 01. 07. 1998 முதல் நடைமுறைப்படுத்தப்பட்ட நிவாரண வெட்டினால் நிவாரணம் மறுக்கப்பட்ட குடும்பங்கள்

| மாவட்டம் | வழங்கப்பட்டவை குடும்பங்கள் | 01. 07. 98 முதல் வழங்கப்படுபவை குடும்பங்கள் | நிவாரண வெட்டுக்குள்ளான குடும்பங்கள் |
|---|---|---|---|
| கிளிநொச்சி | 18, 857 | 8, 889 | 9, 968 |
| முல்லைத்தீவு | 32, 869 | 13, 333 | 19, 536 |
| மன்னார் | 17, 169 | 4, 444 | 12, 725 |
| வவுனியா | 8, 599 | 5, 566 | 3, 033 |
| மொத்தம் | 77, 494 | 32, 232 | 45, 262 |

பாசனக்குளங்களில் 60% ஆனவை போதிய பராமரிப்பின்றி தூர்ந்து போயுள்ளதால் 6,350 .000 கன அடிகளுக்கு மேற்பட்ட நீர் வீணே கடலுக்குப் போய்ச்சேர, சில காலங்களில் வரட்சிநிலை ஏற்படுகின்றது. இந்நிலையில் 1997 இல் ஸ்ரீலங்காவின் ஏனைய பகுதிகளில் நீர்ப்பாசன வசதிக்காக ஏக்கர் ஒன்றிற்கு ரூபா 480/= வீதம் செலவிட்ட ஸ்ரீலங்கா அரசு வன்னிப்பகுதிக்காக ஏக்கருக்கு 70/= ரூபாவைத் தானும் செலவு செய்யவில்லை. ஸ்ரீலங்காவின் ஏனைய பகுதிகளில் வழங்கப்படும் வெள்ள நிவாரணம், வரட்சி நிவாரணம் என்பவை கூட இங்கு வழங்கப்படுவதில்லை.

கடற்றொழிலில் ஈடுபடும் கரையோரப்பகுதி மக்கள் ஸ்ரீலங்கா அரசின் "கடல் வலயத் தடைச் சட்டம்" காரணமாக நீண்டகாலமாக தொழில் வாய்ப்பிழந்தவர்களாகக் காணப்படுகிறார்கள். கரையோரக் கடலுக்குத் தொழிலுக்காகச்சென்ற பலர் கடற்படையினரால் கொல்லப்பட்ட நிலையில் அவர்களுடைய குடும்பங்கள் உழைப்பாளிகளை இழந்து பெரும் அவலங்களைச் சந்தித்து வருகின்றன இந்தநிலையில் ஸ்ரீலங்காவின்ஏனைய பகுதிகளில் வழங்கப்பட்டு வரும் மீனவ நிவாரணம் தமிழ் மக்களிற்கு மட்டும் மறுக்கப்பட்டு வருகிறது.

இத்தநிலையில் வன்னிப்பகுதிக்காக பாதுகாப்பு அமைச்சால் அனுமதிக்கப்பட்ட அளவு கூட உணவுப்பொருட்களைக்கூட இங்கு கொண்டு வந்து சேர்க்கமுடியாத நிலையே காணப்படுகின்றது. இதைச்சாட்டாக வைத்து வன்னி மக்களின் தேவைக்கும் மிஞ்சிய உணவுப் பொருட்களை அங்கு அனுமதித்துள்ளோம் என ஸ்ரீலங்கா அரசு பிரச்சாரம் செய்து வருகிறது. இதன் உண்மைநிலை என்ன?

வன்னியில் உற்பத்திச் சக்திகள் உருவாகுவதற்கு அரசு தடைவிதித்துள்ளது. மக்கள் தொழில் வாய்ப்பை பெறுவதற்கு எந்த வழிவகைகளும் இல்லாது போய்விட்டது. வன்னியில் இன்று வாழும் பெருந்தொகையானோர் இடம்பெயர்ந்து ஏதிலிகளாய் நிற்கும் மக்கள். வன்னியில் நிரந்தரக்குடிமக்களில் 65% மானோர் வறுமைக்கோட்டிற்கு உட்பட்டவர்கள். இதனால் அரசு அனுமதித்துள்ள பொருட்களைக் கூட வெளியிலிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய கொள்வனவு சக்தி இவர்களிடம் இல்லாதது பெரும் துயரம். இத்தகைய சூழலில் மக்கள் வெளியில் இருந்து பணத்தைப் பெற்றுக்கொள்வதையும் அரசு மட்டுப்படுத்தியுள்ளது. 25, 000/=இற்கு மேல் ஒருநபர் வன்னியினுள் பணத்தினைக்கொண்டு செல்லக்கூடாது என்பது அரசின் விதிமுறை. இதை இராணுவம் நடைமுறைப்படுத்துகிறது.

அட்டவணை (iii) தற்போதுள்ளபடியான நிவாரணவெட்டு நடைமுறையினால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள்

| மாவட்டம் | 1998.07.01 ற்கு முன் நிவாரணம் பெற்றகுடும்பங்கள் | 1998. 07. 01 முதல் வழங்கப்படும் குடும்பங்கள் | 1998. 12. 01 முதல் மேலதிகமாக நிவாரணம் பெறும் குடும்பங்கள் | 1998. 07 ற்கு முன்னருள்ளபடி பாதிப்புற்ற குடும்பங்கள் | ரணகோஷ 1,2 நடவடிக்கையால் இடம்பெயர்ந்த நிவாரணம் மறுக்கப்பட்ட குடும்பங்கள் |
|---|---|---|---|---|---|
| கிளிநொச்சி | 18, 857 | 8, 889 | 5, 146 | 4. 822 | 2, 127 |
| முல்லைத்தீவு | 32, 869 | 13, 333 | 8. 619 | 10, 917 | 799 |
| மொத்தம் | 51, 726 | 22, 222 | 13, 765 | 15, 739 | 2, 926 |

ஸ்ரீலங்கா அரசின் இந்தநடைமுறை வன்னி மக்களின் வாழ்வியல் நெருக்கடிக்கு எவ்வாறு தீர்வாக அமையும்? மாத வருமானமாக 1500/= ரூபாவிற்குக் குறைவான வருமானம் பெறுபவர்களுக்கே நிவாரணம் வழங்குவது என்ற பொதுவான நடைமுறை வன்னி மக்களின் வாழ்நிலைக்கு எந்தவகையில் தீர்வாக முடியும்?

ஏனெனில் ஸ்ரீலங்காவின் ஏனைய பகுதிகளைவிடவும் வன்னியில் பொருட்களின் விலை அதியுயர்வானதாக உள்ளது. இதற்கு அரசின் தடைகளே காரணம். 1500/= ரூபாய் வருமானமே வாழ்வதற்கு அடிப்படையிலேயே போதுமானதாக இல்லாத வன்னியில், அனைத்தையும் இழந்து அகதிகளாக எதுவுமற்று நிற்கும் மக்களுக்கு நிவாரணத்தை வெட்டுவது எந்தவகையில் மனிதத்துவமானது?

வன்னியில் பொருளாதார முதுகெலும்பாக இருந்த விவசாயத்தை மேற்கொள்வதற்கும் ஸ்ரீலங்கா அரசு முட்டுக்கட்டையாக இருக்கிறது. வன்னியின் பிரதான நெற்செய்கை நிலங்கள் இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டும், ஆக்கிரமிப்பு அச்சுறுத்தலுக்கு உட்படுத்தப்பட்டும், பயிரிடப்படமுடியாத நிலையில் இருக்கின்றது. எஞ்சிய நிலப்பகுதிகளில் நெற்செய்கை பண்ணுவதற்கும் அரசால் விவசாய உள்ளீடுகள் தடைசெய்யப்பட்டிருக்கின்றன. ஓரளவு கிடைக்கக் கூடிய உள்ளீடுகளும் அதிகவிலைக்கு விற்கப்படுவதினால் அவற்றை வாங்குவதற்கு விவசாயிகள் பொருளாதார வளமற்றவர்களாக இருக்கின்றார்கள். மூன்று மாதங்கள் மட்டுமே மழைவீழ்ச்சி கிடைக்கும் வன்னியில் விவசாயத்திற்கு ஒரு முதுகெலும்பாக இருப்பது நீர்ப்பாசனக் குளங்களே தான். இங்குள்ள 48 பெரிய நீர்ப்

இத்தகைய சூழ்நிலையில் அதிக மனித உழைப்பிலும், உயிரிழப்புக்களுக்கும் மத்தியில் மக்களின் கைகளிற்கு வந்து சேரும் சிறுதொகைப் பணம் உணவுத்தேவை என்பதற்கப்பால் வன்னியில் நிலவும் கொடிய நோய்களால் மருத்துவத்திற்காகவே மாதாந்தம் செலவிடவேண்டிய நிர்ப்பந்தம் ஒவ்வொரு குடும்பத்திற்கும் தவிர்க்கமுடியாமல் ஏற்படுகின்றது. அரச மருத்துவமனைகளுக்குத் தேவையான மருந்து வகைகள் போதியளவு அனுப்பி வைக்கப்படாமை, மக்களின் இத்தகைய நெருக்கடிக்கு மேலும் காரணமாகிறது. அத்தியாவசிய தேவைகளில் ஒன்றான உடையின் விலை சாதாரண மக்களின் கொள்வனவு சக்திக்கு அப்பாற்பட்டதாகவே இருக்கிறது.

உணவுப்பண்டங்களைப் பொறுத்தவரை உயிலங்குளம் கொண்டு வரப்பட்டு மக்களின் கைகளிற்கு எட்டும்போது அது பலவகையிலும் விலை உயர்விற்கு உள்ளாகிறது. இராணுவச் சோதனைச்சாவடி உட்பட ஏனைய இடங்களில் பொருட்களை ஏற்றியிறக்குவதற்கான செலவு, பழுதடைந்த வாகனங்களுக்கு ஏற்படும் பராமரிப்புச் செலவு, பழுதடைந்த வன்னி வீதிகளில் போக்குவரத்துச் செய்ய வேண்டியிருப்பதால் ஏற்படும் செலவு, வாகனங்களிற்கான அதியுயர் எரிபொருட்செலவு, சரக்குகளிற்கு ஏற்படும் சேதாரம் என எல்லாமே நுகர்வோர் மீதே சுமத்தப்படுகின்றது.

இந்நிலையில் அரசு ஒப்புக்கொண்டுள்ள 1500/= வருமானத்திற்கு உட்பட்ட இடம்பெயர்ந்த மக்களுக்கு வழங்கப்படும் நிவாரணத்தில் 18, 665 குடும்பங்களுக்கு இன்னமும் நிவாரணம் வழங்கப்படாது அரசு அம்மக்கள் மீது மறைமுகமான வன்முறையை பிரயோகித்து வருகிறது. விபரங்கள் அட்டவணை 03 இல். சர்வதேச தொண்டர் நிறுவனங்களுக்கு முன்னால் இருநூறு நாட்களாக பட்டினி கிடக்கும் மக்களுக்கு எந்தத்தீர்வும் கிட்டவில்லை. இம்மனிதாபிமான அமைப்புக்கள் இது தொடர்பாக அரசாங்கத்திற்கு உறுதியான அழுத்தங்களைப் பிரயோகித்ததாகவோ, உண்மைநிலைகளைச் சுட்டி ஒரு அறிக்கையைத் தானும் விட்டதாகவோ இதுவரையில்லை. இவ்வமைப்புக்களின் தலைமையகங்கள் இம்மக்களின் விடுதலைக்காகப் போராடும் விடுதலைப்புலிகளை பயங்கரவாதிகள் எனக் குறிப்பிட்டுக் கொள்கின்றனவே தவிர, அரச பயங்கரவாதத்தால் அவலப்படும் இம்மக்களுக்காக ஆக்கபூர்வமான நடவடிக்கை எதுவும் இவற்றால் எடுக்கப்படவில்லை என்பது வேதனைக்குரியது.

ஒடுக்குமுறைக்கெதிராக விடுதலை வேண்டி நிற்கும் மக்கள் மீது உணவை ஆயுதமாகப் பயன்படுத்தும் அரசின் ஈனச்செயலுக்கு தமிழ்மக்கள் அடிபணிந்துவிடுவார்கள் என்று அரசு நம்புகிறதா? !



www.eelamview.com

# வன்னிக்களத்தில் புலிகளும் தேர்தல்களத்தில் 'ரணகோஷ'வும்

"ரணகோஷ" 1,2 இராணுவ நடவடிக்கை மூலம் அதைப் புலிகள் மீதான வெற்றியாகக் காட்டி நடந்து முடிந்த மாகாண சபைத் தேர்தலில் தனது செல்வாக்கை முற்றாகச் சரிந்துவிடாது தக்கவைக்க முடிந்திருக்கிறது சந்திரிகா அரசால். இதன்மூலம் இராணுவம் பலமாக இருப்பதாகவும், புலிகள் வெல்லப்பட்டுவிடுவர் என்றும் சிங்களப் பாமர மக்களை ஏமாற்ற அரசால் முடிந்திருக்கக் கூடும். ஆனால் இதன் உண்மை நிலை என்ன?

பெருமெடுப்பில் தனது பலத்தின் முழுமையையும் பயன்படுத்தி செயற்பட்ட "ஜயசிக்குறுவை" பேரழிவுக்கு உட்படுத்தி தோல்வியடையச் செய்த புலிகளுக்கு "ரணகோஷ" தம் வலுகவெட்டாத நடவடிக்கையா?

ஒரு இராணுவ நடவடிக்கை தன் தேசத்தின் நலனுக்கான இராணுவ நோக்கத்தைக் கொண்டிருக்க வேண்டும். அவ்வாறு இல்லாது பிறகாரணங்களுக்காக இராணுவ நடவடிக்கை அமையுமானால், அது தன் இராணுவத்தை நெருக்கடிக்கு உள்ளாக்கி எதிர் தரப்பிற்கு வெற்றிக்கான வாய்ப்பை அளித்துவிடும்.

"ரணகோஷ" 1,2 பொதுஜன ஐக்கிய முன்னணியின் மாகாண சபைத் தேர்தல்வெற்றிக்கான நோக்கம் கொண்ட இராணுவ நடவடிக்கை என்பது வெளிப்படையாகப் புரிந்துகொள்ளக்கூடிய தொன்றே. ஏனெனில் சந்திரிகா அரசு தன் கட்சி அரசியல் தேவைக்காக இராணுவ நடவடிக்கை செய்வது இதுதான் முதற்தடவையும் அல்ல.

**- கு. கவியழகன் -**

உள்ளூராட்சிசபைத் தேர்தலுக்காக "எடிபல", மேல்மாகாண சபைத் தேர்தலுக்காக "ரிவிபல" இப்போது ஏனைய 05 மாகாண சபைத் தேர்தலுக்காக "ரணகோஷ" என அதன் பட்டியல் நீண்டு வருகிறது. இந்த அரசு சந்தித்த மூன்று தேர்தல்களுக்கும் இராணுவ நடவடிக்கைகள் செய்து வாக்குத் திரட்ட முயன்றிருக்கிறது. இந் நடவடிக்கைகள் அரசாங்கத்தின் வாக்கு வேட்டைகளை குறியிலக்காகக் கொண்டு நடத்தப்பட்டவை. அவ்வளவு தான்.

இவ்வாறான எந்த நடவடிக்கைக்கும் புலிகள் இயக்கம் எதிர்த்தாக்குதல் செய்து தம் பலத்தை சிதைத்துக்கொண்டதில்லை. புலிகள் அமைப்பு தமிழீழ விடுதலைக்காக தலைவர் பிரபாகரனின் தலைமையின் கீழ் அணிதிரண்டு நிற்கும் தமிழர்களின் ஒரு இராணுவ அரசியல் சக்தி. அதன் குறியிலக்கு தமிழீழ தேசவிடுதலையே. இக்குறியிலக்கின் பிரதான தடையாக இருக்கும் எதிரியின் இராணுவ பலத்தை உடைத்து வெற்றிகொள்வதற்கான போர்முறையோபாயத்தையும், அதற்கான தந்திரோபாயத்தையும், செயல் நுணுக்கங்களையும் வகுத்துப் போரை வழிநடத்தி வருபவர் எமது தேசியத்தலைவர் வே. பிரபாகரன்.

இன்று புலிகளின் போர் அசைவுகளை உலகம் அவதானித்து வருகிறது. புலிகள் வெற்றிகொள்ளப்படமுடியாத இராணுவபலம் பொருந்திய ஒரு சக்தி என்பது இராணுவ அறிவுலகிற்கு வெளிப்படையான ஒரு விடயம். அப்படியாயின "ரணகோஷ" புலிகளின் வல்லமைக்கு அப்பாற்பட்டதா? நடந்தது என்ன?

போர் மையங்கொண்டு நிற்பது வன்னிச்சமர்க்களத்தில். வன்னிச்சமர்க்களத்தில் எதிரியின் இராணுவ நோக்கம் பாதை திறப்பு. பாதை திறப்பு இன்று பாதி வழியில் நிற்பதற்குக் காரணம்! அது தன் பலத்தில் அடைந்த பேரிழப்பு. பேரிழப்பிற்கான காரணம் தலைவர் பிரபாகரனின் போரறிவு. புலிகளின் போர்ப்பலம், புலிகளின் போராற்றல்.

பாதை திறப்புச் சமர் நடவடிக்கையென்பது, அரசுக்கு ஏற்பட்ட ஓர் நிர்ப்பந்தம். யாழ்ப்பாண ஆக்கிரமிப்பைப் புலிகள் மீதான வெற்றியாகவும் தமிழர் மீதான வெற்றியாகவும் சிங்கள தேசத்திற்குக் காட்டி, இலவாத அரசியல் நடத்தி, தம்மை அரசியலில் நிலைப்படுத்திக்கொண்டது. சந்திரிகா அரசாங்கம்.



"இலக்கு வெகு துல்லியம் !" - எறிகணை உகப்பும் ஏவுபொறிச் சுடுதிறன் மேலாண்மை, தமிழர்சேனையின் மரபுபோர் முதிர்ச்சியில் ஒரு மைல்கல்!

அந்த மாயையை புலிகள் "ஓயாத அலைகள் 01" மூலம் வேரோடு பிடுங்கி எறிந்தனர். மேலும் முல்லைக்கடற்பரப்பை புலிகள் மீட்டமை யாழ்ப்பாண வெற்றியைக் கேள்விக்குறியாக்கியது. யாழ்ப்பாணத்தைத் தக்கவைக்க பாதைதிறப்பு நடவடிக்கை தவிர்க்க முடியாத நிர்ப்பந்தமாக அரசுக்கு எழுந்தது. பாதை திறப்பிற்கான சமரை தொடக்கியது.

அசாத்தியமான ஒரு இராணுவ இலக்கிற்காக இராணுவத்தை போர் செய்ய நிர்ப்பந்தித்து இராணுவ இயந்திரத்தை வன்னிச் சமர்க்களத்தில் மையம் கொள்ளவைத்து, இராணுவ போர்ப்பலத்தை வன்னிச்சமர்க்களத்திற்கு இழுத்து, தமது பலத்திற்கேற்ப, சிதறடிக்கப்பட்ட இராணுவத்தை பகுதி பகுதியாகத் தாக்கியழித்து வெற்றிகொண்டு வருகிறது புலிப்படை.

இச்சண்டைகளிலும், சமர்களிலும் குறைந்த பலத்தைப்பிரயோகித்து குறைந்த இழப்புகளுடன் நிறைந்த வெற்றியைக் காண்பதுவே முக்கியவிடயமாகக் கொள்ளப்படுகின்றது. இத்தாக்கியழிப்புச் சமர்களின் வளர்ச்சிப்போக்கில் இராணுவ இயந்திரம் மீது இறுதித்தாக்கியழிப்பிற்காக புலிகள் எழுந்துகொண்டிருப்பதுமே இன்றைய நிலைமை.

இவ்வாறான சூழ்நிலையில் தான் அரசாங்கம் மாகாணசபைத் தேர்தலை பிற்போடமுடியாது சந்திக்கவேண்டிய கட்டாயமும் ஏற்பட்டது. இத்தேர்தலைச்சந்திக்க இராணுவ வெற்றியொன்றின் தேவை இலவாத அரசியலில் அத்தியாவசியமானது. இராணுவ நோக்கம் கருதிய பாதைதிறப்புச் சமரில் ஏற்பட்ட தோல்வியைத் திசைதிருப்பும் கட்சி அரசியல் நோக்கத்திற்காக "ரணகோஷ" ஆரம்பிக்கப்பட்டது.

புலிகள் தமது தந்திரோபாய நோக்கத்திற்கேற்ப "ரணகோஷ1" இல் முன்னேறும் இராணுவத்தை தடுத்து நிறுத்துவதற்கான எல்லைய வரையறை செய்தனர். இராணுவம் அதோடு தமது முன்னேற்றத்தையும் நிறுத்திக்கொண்டது.

அதன்பின் தன்னாடி முகாமைத் தளமாகக்கொண்டு, "ரணகோஷ -02" ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகள் இராணுவத் தரப்பால் மேற்கொள்ளப்பட்டுக் கொண்டிருந்தன. மாந்தையிலிருந்து பள்ளமடு ஊடாக பெரியமடுவிற்கும், இரணைஇலுப்பைக்குளத்திலிருந்து பாலமடு ஊடாக பெரியமடுவிற்கு வந்தடைவது தான் இராணுவத் திட்டமாக இருந்தது. ஏற்பாடுகள் பூர்த்தியாகும் இறுதித்தறுவாயில், தன்னாடி முகாம் மீது விடுதலைப் புலிகளின் பீரங்கிப்படைப்பிரிவு மூலம் ஒரு "சிக்கனத்தாக்குதலை," ஏற்பாட்டைக்குலைக்கும் நோக்குடன் புலிகள் நடத்தினர். ஆட்பலம் இழக்கப்படாது எதிரியின் ஏற்பாட்டைக்குலைக்க வேண்டும் என்பது இங்கு கருத்திற்கொள்ளப்பட்டது. விடுதலைப்புலிகளின் பீரங்கிப் படைப்பிரிவு மட்டும் இத்தாக்குதலில் ஈடுபடுத்தப்பட்டது.

இத்தாக்குதலால் எதிரியின் போர் நடவடிக்கை, ஆயுதங்கள் உடைவடியாகக் குழம்பின. களஞ்சியங்கள் அழிக்கப்பட்டன. 20 இராணுவம் வரை உயிரிழந்ததாகவும், நூறுக்கும் மேற்பட்டோர் காயமடைந்ததாகவும் இராணுவத்தரப்பு ஒத்துக்கொண்டுள்ளதாக கொழும்பு பத்திரிகைகள் செய்தி வெளியிட்டிருந்தன. மேலதிக உயிரிழப்பு அறியப்படவில்லை. ஸ்ரீலங்கா இராணுவத்தால் அண்மையில் கொள்வனவு செய்யப்பட்ட இரும்புக்குதிரை வென அழைக்கப்படும் இராணுவ வாகனத்தில், 09 வாகனம் இத்தாக்குதலால் எரிந்ததென "சண்டே டைம்ஸ்" பத்திரிகை தெரிவித்தது. இரும்புக்குதிரை எனப்படும் இவ்வாகனம் தன்னோடு ஒரு ஆட்லறியைக் கட்டி இழுத்துச்செல்வதுடன் 150-200 வரையான ஆட்லறி செல்களையும் காவிச் செல்லக்கூடியது.

1500இற்குக் குறையாத ஆட்லறி செல்கள் வெடித்துச் சிதறியதாக கொழும்பு இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன. தளம்மீது மிகத் துல்லியமான எறிகணைவீச்சினை புலிகளால் எவ்வாறு செய்யமுடிந்தது என இராணுவத்தரப்பு குழம்பியது. இது இராணுவத்திற்கு ஒரு அதிர்ச்சி வைத்தியம் என்பதில் சந்தேகம் இல்லை.

இத்தாக்குதலின்பின் தன்னாடியிலிருந்து 21-2 பிரிகேட் தலைமையகம் வங்காலைக்கு மாற்றப்பட்டுள்ளது. புலிகள் கையாண்ட ஆள் இழப்பற்ற "சிக்கனத் தாக்குதல்" முறையால் இனிவரும் காலத்தில் முன்னணிக் காவலரண்கள் அருகே சண்டைக்கான ஏற்பாட்டுத்தளங்களை வைத்திருக்கவோ, ஏற்பாட்டைச் செய்யவோ முடியாத சூழ்நிலை உருவாகியிருக்கிறது. இதேபோல கட்டளைத் தலைமையகங்கள், ஆயுத, வெடிபொருட்களஞ்சியங்கள், ஆட்லறிகள் என்பவற்றையும் வைத்திருப்பதில் நெருக்கடி உருவாகப் போவதை எண்ணி இராணுவத் தரப்பு குழம்பியுள்ளது. இது களநடவடிக்கையில் இராணுவத்திற்கு மேலும் கடினத்தைக் கொடுக்கப்போகிறது.

( 11 ஆம் பக்கம் பார்க்க )

www.eelamview.com



(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

## விழுதெறிந்த...

கடுமையான பயிற்சிகளை எல்லாம் எடுத்திருப்பான். இறுதி மூச்சிலே பகை எரிக்க அந்த இலக்கு கிடைக்கும்வரை இத்தனை வருடங்கள் காத்திருந்தானே! அவனது இலட்சியம் எத்தனை பெரியது.

அவனிற்கு உடம்பில் ஏராளமான காயங்கள். 1994 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஆனையிறவுப்படைத்தளம் மீதான கரும்புலித் தாக்குதல் ஒன்று செய்வதற்கான இறுதி வேவிற்கு சுபேசன் சென்றிருந்தான். அன்று எதிரியுடன் மோத நேர்ந்தது. சுபேசனிற்கு கையில் பெரிய காயம். அன்று ஏற்பட்ட காயத்தினால் இன்றும் பெரிய வேலைகள் செய்தால் கைமூட்டுக் கழன்றுவிடும். பின் அவன் தானே கைமூட்டைக் கொழுவி தன் பணிகளைச்செய்து கொள்வான். எல்லா ஆயுதங்களையும் சிறப்புற இயக்கும் தேர்ச்சி பெற்றதோடு சிறந்த சூட்டு வல்லமையும் கொண்டவன். எந்த ஒரு இறுக்கமான சூழ்நிலையிலும் நன்கு திட்டமிட்டு அணிகளை சிறந்தமுறையில் வழிநடத்தக்கூடியவன். சேனைகுடாவில் எதிரி வானூர்தியையும், கனரக ஆயுதங்களையும் அழித்த கரும்புலி அணிகளிற்கு சுபேசனே தலைமையேற்றுச் சென்றிருந்தான்.

அன்றொருநாள் ஆகாயக் கடல்வெளித் தாக்குதலை முறியடிப்பதற்காக வெற்றிலைக்கேணியிலிருந்து ஆனையிறவுக்கு சிங்கள இராணுவம் பெரிய நகர்வு ஒன்றினை மேற்கொண்டது. அதற்கு ஊடறுப்புத்தாக்குதல் மேற்கொள்ள நின்ற எமது அணிகளுடன் ஒன்றாக சுபேசனும் 05 பேர் கொண்ட வேவு அணியுடன் நின்றான். முதல் நாள் சுபேசனும் சென்று வேவு பார்த்துவிட்டு வந்திருந்தான். அடுத்த நாள் ஊடறுப்புத்தாக்குதலுக்குத் திட்டமிடும் வேலை இருந்தமையால் சுபேசன் வேவுக்குச் செல்லாது முகாமில் தங்கிக்கொள்கிறான். சண்டைச் சூழ்நிலை காரணமாக உணவு விநியோகம் பெரிதும் சீர்குலைந்திருந்தது. எப்போதாவது வரும் சாப்பாட்டை சாப்பிடுவது, சாப்பாடு வராவிட்டால் சாப்பாட்டை எதிர்பார்க்காது தத்தமது கடமைகளைச் செய்யவேண்டிய ஒரு சூழ்நிலையே இருந்தது. அன்று சாப்பாடு வந்திருந்தது. ஆனால், அங்கே நின்ற ஆட்களைவிட வந்திருந்த சாப்பாட்டுப்பொட்டலங்கள் குறைவானதாக இருந்தது. 05 பேர் கொண்ட சுபேசனின் அணிக்கு இரண்டு சாப்பாட்டுப் பொட்டலங்கள் கிடைத்தன.

தனது தோழர்கள் வேவு பார்த்துவிட்டு களைத்துப்போய் வருவார்களே அவர்களுடன் சேர்ந்து சாப்பிடுவோம் என எண்ணியவன் அந்த உணவுப்பொட்டலங்களை துணி ஒன்றினால் சுற்றி கவனமாக வைத்துவிட்டு படுத்துவிடுகிறான். அவன் முதல்நாள் சாப்பிட்ட சாப்பாடுதான் — அன்று மதியம் கழித்துக்கொண்டிருந்தது. இந்தளவு நேர இடைவெளிக்குள் ஒன்றோ இரண்டு இளநீர் குடித்திருந்தான். படுத்திருந்த சுபேசனிற்கு வேவு பார்க்க சென்ற தோழர்கள் வருகின்றார்கள் என்ற செய்தி காதில் எட்ட, நித்திரை விட்டு எழுகிறான். எழுந்திருந்தவன் உடனே தான் எடுத்துவைத்திருந்த சாப்பாட்டுப் பொட்டலங்களைப் பார்க்கின்றான். பொட்டலங்களைக் காணவில்லை... ... யாரோ அந்தச் சாப்பாட்டுப் பொட்டலங்களை எடுத்து சாப்பிட்டுவிட்டார்கள். பொங்கி வந்த அழுகையினை சுபேசனினால் அடக்கிக்கொள்ள முடியவில்லை. உணவு இருக்கும் என்ற நம்பிக்கையோடு வருவார்களே தன் தோழர்கள் அவர்களுக்கு என்னவென்று சாப்பாடு இல்லையெனச் சொல்வது — அவன் துடித்துப்போனான்.

முதல் நாள் மதியம் சாப்பிட்ட சாப்பாட்டுடன் சென்று களைத்துப்போய் வந்திருக்கிறார்களே எப்படி பசியைத் தாங்கிக்கொள்ளப்போகிறார்கள். அவர்களிற்கு ஒருவேளை உணவுகூட கொடுக்கமுடியவில்லையே என கலங்கினான். அவனது மன வேதனை கண்களால் வெளியே நின்றுகொண்டிருந்தது. பெற்ற பிள்ளைகள் பசியில் துடிப்பதைப் பார்த்து ஒரு தாய் அழுவாளே அதே மாதிரி அழுதான் எங்கள் சுபேசன். அவன் தோழர்கள் எவ்வளவோ சமாதானப்படுத்தியும் சுபேசனின் அழுகை நிற்பதாக இல்லை. நின்ற வேறு தோழர்கள் அங்கு தேடி, இளநீர்களைப் பிடுங்கிக்கொண்டு வந்து எல்லோருக்கும் கொடுத்து சுபேசனிற்கு கொடுத்தபோதும் அவன் குடிப்பதாக இல்லை.

"என்ர பெடியள் சரியான பசியாய் இருப்பாங்கள் அவங்களுக்குக் கொடுங்கோ எனக்கு வேண்டாம்" அவன் மறுத்தே விட்டான். இப்படித்தான் என்றும் தன்னைவிட பிறரை நேசிக்கும் மனம் அவனிற்கு.

☆ ☆ ☆

நாள் கடைசியாகச்சிரித்து அவனோடுபேசிய அந்த இறுதியான அந்த நேரமே இவனது உணர்வுகள் எவ்வளவு புனிதமாக இருந்தது.

ஆனையிறவு படைத்தளத்திற்குள் ஊடுருவி முதலாவது கடை தாண்டியாகி விட்டது. தாக்குதல் ஆரம்பிக்க இன்னும் ஒரு சில மணித்தியாலங்கள் இருந்தது. இறுதியாக நாங்கள் பழத்தின்களையும், உலர்உணவுகளையும் சிரித்து கலகலப்பாகச் சாப்பிட்டுக்கொண்டிருந்தோம். சுபேசன் மட்டும் ஒவ்வொரு போராளியின் முகத்தையும் பாசமாய்ப் பார்த்தான். அவனது முகத்தில் லேசாக சோகம் படர்ந்திருந்தது. இன்னும் ஒரு சில மணித்தியாலங்களிற்குள் வெடிக்கப்போகும் அந்த சுபேசன் என்ன சொன்னான் தெரியுமா? ....

"பார் மச்சான் எவ்வளவு சிரிப்பு கலகலப்பாக இருக்கிறான்கள். இன்னும் கொஞ்ச நேரத்தில் — —" அவனால் அதற்குமேல் எதுவும் பேசமுடியவில்லை. நீயிற்குள் இருந்து நீர் வடியும் உணர்வு அவனுக்கு. அவன் தனியாக இலக்கை அழிக்கச் சென்றிருந்தால் கவலைப்பட்டிருக்கமாட்டான். தன்னுடன் சேர்ந்து கூடிக்கும்மாளம் போட்டுப்பழகிய இந்த வீரர்கள் இன்னும் சில மணி நேரத்தில் காவியங்களாகப் போகின்றார்களே என்ற ஏக்கம்தான் அவனுக்கு. தன்னை அழிக்கத் துணிந்த அந்த வீரன் இறுதி நேரத்தில் இப்படி ஏங்கினான் என்றால், அவன் மற்றவர்களின் வாழ்வை, மற்றவர்களை எப்படி உன்னதமாக நேசிக்கின்றான். இப்படி எல்லோரிலும் பாசம் வைக்கும் சுபேசன் இயக்கத்திற்கு வந்ததும், அண்ணனைப் பிரிந்து வாழ முடியாது என்று அண்ணனுடன் கூட இருப்பதற்காக இயக்கத்திற்கு வந்தாளே அவன் தங்கை. அவள் மீது எவ்வளவு பாசம் வைத்திருப்பான்.

தன் தங்கை மீதும், எம் தேசம் மீதும், ஒவ்வொரு மக்கள் மீதும், எங்கள் தலைவன் மீதும் எவ்வளவு பாசம் வைத்திருந்தானோ அதுதான் அவனை ஒரு உன்னத கரும்புலி வீரனாக்கியது.

☆ ☆ ☆

சண்டைகளின் சீறல் இன்னும் அடங்குவதாய் இல்லை. தொடர்ந்து வெடிமுழக்கம்.

"புலிகளின் தாகம் தமிழீழ தாயகம்" சுபேசன் அழுத்தமாக உரைத்தது வானில் எதிரொலித்தது. எப்போதுமே மற்றவர்களிற்காக சுவாசித்துப் பழகிப்போன அவனது மூச்சு நிச்சயம் எம் தேசத்தை வாழவைக்கும். ○

(04ஆம் பக்கத் தொடர்ச்சி)

## வீரத்தின்...

20 சித்திரை 1998இன் ஒரு
காலைப்பொழுது !

எதிரி மாங்குளத்தை எப்படியும்
அன்று பிடித்துவிடவேண்டும் என்ற
முடிவோடு இருந்தான். இதற்காக ஒலுமடு
பகுதியூடாகவும், கனகராயன்
ஆற்றுப்பகுதியாலும், மூன்றுமுறிப்பாலும்
எதிரி சண்டையைத் தொடக்கியிருந்தான்.
எம் போராளிகள் சிலரின் சாவே
அவனுக்கு அவனது இலக்கையெட்டும்
நிலையை ஏற்படுத்தப் போதுமானதாக
இருந்தது.

ஆக, சில பத்துப்போராளிகளே
காவலில் நின்ற எம் காவலரண்
தொடரில் ஒரு பகுதியை நோக்கி
ஒன்றல்ல, இரண்டல்ல பல ராங்குகள்
அணிவகுத்து முன்னேறின.
முன்னேறுவது, பின்னர் தரித்து நின்று
எம் நிலைகள்மீது அடிப்பது, பின்
முன்னேறுவது என எதிரி ராங்குகள்
முன்னேறிக்கொண்டிருந்தன.

எண்ணிக்கையில் நாம்
குறைந்திருந்தோம். எதிரி வருவது
உருக்கு இயந்திரங்களில். எம்மிடம்
இருந்ததோ சாதாரண துப்பாக்கிகள்.
நாம சுடச்சுட எதிரி முன்னேறினான்.
எம்மவர் இயன்றவரை சுட்டனர். ஆனால்
பிரயோசனம் என்ன? சுட்ட
ரவைகள் எல்லாம் எதிரியின் உருக்கு
இயந்திரங்களில பட்டுச்சிதறி
விழுந்துகொண்டிருந்தன.

நவீன கவசக் கவச எதிர்ப்பு
ஆயுதங்கள் அன்று அவ்விடத்தில்
எம்மிடம் இருக்கவில்லை.
எம்மால் ராங்குகள் மீதான
எதிர்ப்பைக்காட்ட முடியாத துரதிஸ்ட
நிலை. எம்மின் பலரின
உயிர்களைக் குடித்துவிட்டு
ராங்குகள் சில எம் காவலரண்கள் மீதும்
ஏறிவிட்டிருந்தன.

எல்லாம் முடிந்த நிலை. எஞ்சிய
சில போராளிகள் மட்டுமே காவல்
அரணில் நின்றனர். இப்போது அந்தச்
சண்டையை தீர்மானிக்கும் பொறுப்பு
அங்கு எஞ்சிநின்ற ஒருசிலர் மேலேயே.
அவர்களின் முடிவே அன்றைய
சண்டையின் முடிவு. நாளைய சமரின்
முடிவு. காவலரணில் ஏறிவிட்ட
ராங்கை ஏதாவது
செய்தாகவேண்டும் என்றான நிலை.

அன்றைய நிலையில்
எம்காப்பரண் வேலியை உடைத்து,
எம் காவலரண் வேலியூடாக
எதிரியின் நகர்வு என்பதுகூட ஒருவருட
போர் உழைப்பை வீணாக்கிவிடும்.
எதிரியின் ஜயசிக்குறுய்
எனும் கனவு பலித்துவிடும். இதுவரை
ஜயசிக்குறுயில் நாம் இழந்துவிட்ட
உயிர்களும், பட்டுவிட்ட கஸ்ரங்களும்
அர்த்தம் அற்றதாகிவிடும். இத்தனைக்கும்
மேலாக எதிரியின் உடனடி இலக்கு
எட்டப்பட்டுவிடும்.

இத்தனையும் சாதித்துவிட முயன்றது
எதிரியின் ராங்குப்படையின் நகர்வு.
இத்தனையும் நிகழ்ந்துவிட அனுமதித்தது
அன்று எம்மிடம் கைவசம் இல்லாத
ராங்க் எதிர்ப்பு ஆயுதங்கள்.

எப்படி விடமுடியும். இரத்தமும்
சதையுமாகிவிட்டன எம் காப்பரண்கள்.
அதை எப்படிவிட முடியும் எதிரியிடம்.

முடிவு? வார்த்தைகளால்
வர்ணிக்கமுடியாதது என்பதை அங்கே
எஞ்சி நின்றவர்கள் நன்கு உணர்ந்தேயிருந்
தனர். அதில் அவன் இறுதித்தீர்மானம்
எடுத்து இருந்தான்.
தன் தேசத்திற்காக
எதனை அவனால் உயர்ந்த
பட்சம் சாதிக்க முடியுமோ அதை அவன்
சாதித்தான். தன் உயிரால்
கூடியபட்சம் செய்யக்கூடியதை
தன் முடிவாக எடுத்தான்.

தன் தலைக்கு மேலேயுள்ள
காவலரணில் ஏறிய ராங்க் ஒன்றினுள்
குண்டுடன் பாய்ந்தான்
அந்தப் போராளி. அவன்தான்
கப்டன் அன்பழகன். எதிரி ராங்க்
குண்டினால் வெடித்ததைப்
பார்க்கக்கூட அங்கே அவன் உயிருடன்
இருக்கவில்லை.

உண்மையில் அது ஒரு
மயிர்க்கூச்செறியும் சம்பவம்.
அன்றைய கள நிலவரத்தில் புதிதாக
உதவியணிகள் வரவழைக்கப்பட்டு,
உள்நுழைந்துவிட்ட ராங்குகளை
கலைப்பதில் ஏற்படப்போகும்
சிக்கலை தனது போர் அனுபவம்
மூலம் அவன் தெரிந்திருந்தான்.
எல்லாவற்றிற்கும் மேலாக
அப்போது தனக்கிருந்த கடமையை
அவன் உணர்ந்திருந்தான்.
தன்னில் தங்கிநின்ற ஒரு சண்டையை,
ஒரு சமரின் முடிவை, அந்தச்
சமரின் முடிவால் தான்
நேசித்த மக்களுக்கு ஏற்படப்போகும்
தாக்கத்தை விளங்கியிருந்தான்.
அதனால்தான் அவன் தளபதிகள்
"அவன் தன் தேசத்திற்குச் செய்ய
வேண்டியதை உணர்ந்திருந்தான். உறுதி
யான புலிவீரன் என்பதை நிரூபித்தான்".
என்று கூறத்தக்கவாறான புலிகளுக்கே
தனித்துவமான அந்த வீர முடிவை
எடுத்தான்.

ஆம்! அன்றைய சண்டை,
அதனை மாற்றியது கப்டன்
அன்பழகனே. அன்று ராங்குகள்
நுழைந்த சொற்பநேரத்தில் அந்தப்பகுதி
எதிரிகளால் கைப்பற்றப்படவிருந்த
அபாயத்தை நீக்கியது அவனின்
அந்த வீரச்செயல்.

"சத்தியத்திற்காகச் சாகத்
துணிந்துவிட்டால் ஒரு சாதாரண
மனிதப் பிறவியும் சரித்திரத்தைப்
படைக்கமுடியும்" என்ற
தலைவரின் சிந்தனையை
செயல் வடிவாக்கியவன்
இந்தப் போராளி. ○



www.eelamview.com

www.eelamview.com



# போராளியின் குருதிச்சுவடுகள்



# விழுதெறிந்த விருட்சத்தின் வெளித்தெரியா வேர்கள்



## கரும்புலி லெப். கேணல் சுபேசன் / கிள்ளிவளவன்

மருசலின் அல்வின்
மன்னார்

- பிறப்பு: :- 02 07. 1971
- இயக்கத்தில் :- 10. 02 1990
- சகோதரர்கள் :- ஒரு அண்ணனும் 03 அக்காவும் 04 தம்பியும், ஒரு தங்கையும்

கரும்புலியாய் இணைந்துகொள்ள முன் பங்கு பற்றிய தாக்குதல்கள்

- ஆ. க. வெ. பெருஞ்சமர்
- மின்னல் இராணுவ நடவடிக்கைக்கு எதிரான சண்டை, கொக்குத்தொடுவாயில் மேற்கொள்ளப்பட்ட பதுங்கித் தாக்குதல்
- சின்னமண்டலாய்ப் பகுதியில் மேற்கொண்ட காவலரண் அழிப்புச்சண்டை
- கட்டுப்பத்தை இராணுவ முகாம் தாக்குதல்

---

நேரம் நள்ளிரவை நெருங்கிக்கொண்டிருந்தது அந்த இரவின் அமைதி குலைந்து நீண்ட நேரமாகிவிட்டது. கருமை பூசியிருந்த இருளினை இடையிடை முழங்கிய துப்பாக்கி, குண்டுகளின் வெளிச்சம் சிதைத்துக்கொண்டிருந்தது.

எதிரியின் பலமான தடைகளை உடைத்துக்கொண்டு உள் நுழைந்த எமது கரும்புலி அணிகள் தாக்குதல்களை வேகப்படுத்தின. நாங்கள் தேடிச்சென்ற இலக்குகள் குறித்த நேரத்திற்குள் தகர்த்தெறியப்பட்டன. இலக்குகளை அழித்ததும் கரும்புலி மேஜர் குமுதனிடம் இருந்து பின்வாங்கும்படி கட்டளை கிடைத்தது.

நாங்கள் பின்வாங்குவதற்கான வியூகங்களை ஏற்படுத்தி வேகமாகப் பின்வாங்கத் தயாரானோம். ஆனால் எங்கள் அணியினை பொறுப்பேற்று வந்திருந்த சுபேசனிற்கு காலிலும், நெஞ்சிலும் குண்டு பாய்ந்திருந்தது. எங்களுடன் சேர்ந்து சுபேசனால் பின்வாங்க முடியவில்லை. தூக்கிக்கொண்டு வந்தாவது அவனை காப்பாற்றுவோம் என முயற்சித்தோம். அந்த நிலையில் அது சாத்தியப்படாத காரியம்.

" என்னைப்பார்த்து நிற்காதிங்கோ. என்னைத் தூக்கிக்கொண்டு பின் வாங்க ஏலாது. நீங்கள் போங்கோ "

சுபேசன் எங்கள் எல்லோரையும் பார்த்து எதுவித கலக்கமும் இல்லாது உறுதியாக இறுதி விடை தந்தான்.

எப்படி அவனைப் பிரிந்து போவது — எங்களுக்கு அது கஸ்ரமாக இருந்தது.

" நீங்கள் நிறையச் சாதிக்க வேண்டியனீங்கள். என்னைப் பார்த்து நின்று வீணாய் காயப்படாதிங்கோ தயவு செய்து போங்கோ — நான் சாஜ்சரை இழுக்கப்போறேன் —"

இப்பொழுது நாங்கள் அவனைப் பிரிந்து போனால் இன்னும் ஒருசில விநாடிகளுக்குள் அங்கே சம்பவிக்கப்போகும் அந்த நிகழ்வு நினைத்துப்பார்க்கவே உயிரைப் பிளிந்தது. இனி என்றுமே, எப்பவுமே அவனைப் பார்க்கவோ அவனோடு பேசவோ முடியாது.

அப்படி ஒரு நிகழ்வு இங்கே நடக்குமானால்.. எண்ணிக்கொள்ளவே நெருடலாக இருந்தது. "சுபேசன் வீரச்சாவடைந்துவிட்டான்" என்று எப்படி அவன் தங்கையிடம் போய்ச்சொல்வது. அதை அவள் எப்படித் தாங்கிக்கொள்ளப்போகிறாள்.

"சுபேசன் தங்கைமீது எவ்வளவு பாசம் வைத்திருந்தான். என்னமாதிரி எல்லாம் நேசித்தான். சின்ன வயதில் இருந்து ஒருவர்மேல் ஒருவர் அளவில்லாத பாசம் வைத்து வளர்ந்தவர்கள். தாய் தந்தையிலோ, மற்ற சகோதரர்களிலோ வைத்த பாசத்தை விட சுபேசன் மீது அதிக பாசம் வைத்திருந்தாள் அவள்.

நாங்கள் சினன்குடாத்தாக்குதலுக்காக பயிற்சி எடுத்துக்கொண்டிருந்த வேளை....

சுபேசனின் தங்கையை யாரோ ஒருவன் கடத்திச் செல்கிறான். சுபேசன் துடிதுடித்துப்போய் ஓடிச்சென்று தங்கையைக் காப்பாற்றுகின்றான். இருந்தாலும் தலையில் பலமாக அடிபட்டு மயங்கிவிடுகிறாள். மயங்கிய தங்கையை கைகளில் சுமந்து — பின் ஓரிடத்தில் தண்ணீர் தெளிக்கவே அவள் மயக்கம் தெளிந்தாள்."

இப்படி ஒரு கனவினைக் கண்டுவிட்டு அவன் நிஜமாகவே துடிதுடித்துப்போய் விட்டான். நித்திரையால் திடுக்கிட்டு விழித்தவனுக்கு மறுபடியும் தூக்கம் வரவில்லை. தங்கையின் நினைவுகளே சுற்றிச்சுற்றி அவன் கண்களுக்குள் நுழைந்தன.

விடிந்ததும் தங்கையிடம் சென்று அவளைப் பார்த்து தான் கண்ட கனவினை அவளோடு கதைத்த பின்னர்தான் அவனின் மனம் ஆறுதலானது இரவு கனவுகண்டுவிட்டு எழுந்து போராளிகளிடம் கூறும்போது எவ்வளவு துடித்தான். கனவிலேயே தங்கச்சி படும் கஸ்ரத்தினைக்கண்டுவிட்டு தங்கைக்கு என்னவோ ஏதுவோ என ஏங்கிய அவனது உணர்வுகள் தங்கையை இறுதியாய் பிரிகின்றவேளை எப்படி இருந்திருக்கும். அவனின் மனம் என்னபாடுபட்டிருக்கும்!

☆ ☆ ☆

ஆனையிறவுப் படைத்தளமே எமது இலக்கிற்கான இடம். எமது முகாமில் இருந்து நாங்கள் புறப்பபட்ட அந்த இறுதி நேரம் —

நாங்கள் எல்லோரும் வாகனத்தில் ஏறி அமர்ந்து விட்டோம். இன்னும் சில விநாடிகளில் வாகனம் புறப்பட்டுவிடும். இறுதியாய்ப் பிரிகின்ற அந்தக் கணம் - எல்லோரும் மாறிமாறி விடை கொடுத்துக்கொள்கிறோம். இந்த இறுதியான விடைகொடுப்பு யார்யாருக்கு நிரந்தரமாய் போகும் சந்தர்ப்பம் கிடைக்குமோ தெரியாது. என்றுமே, எப்பவுமே இனிக்காண முடியாத அந்தப் பிரிவு நிகழ்ந்த வேளை ... சுபேசனைவிட்டுப் பிரிந்திருக்க முடியாது இயக்கத்திற்கு வந்த அவனின் பாசத்தங்கையும் அங்கே நிற்கின்றாள். இன்னும் ஒன்றோ இரண்டோ விநாடிகளில் அவன் புறப்படப்போகின்றான். அந்த ஒருசில விநாடிகளைக் கூட தங்கையுடனேயே பேசிக்கழித்தான்.

இரண்டு பெருநதிகள் ஓடிவந்து கலக்குமே ஓர் இடம்... அங்கு எழுகின்ற ஆர்ப்பரிப்பினைப் போன்று இரண்டுபேர் மனதிற்குள்ளும் எத்தனையோ மனக்குமுறல்கள். என்னால் சொல்ல முடியவில்லை.

போராளிகளுடன் சிறிதுகாலம் பழகிப்பிரியும்போது கூட தாங்கிக்கொள்ள முடியாத சுபேசன், நினைவு வந்த நாளில் இருந்து உயிராய் நேசித்த தங்கையின் பிரிவை எப்படித்தான் தாங்கிக்கொள்ளப்போகிறான்.

தங்கைக்குத் தெரியும் அண்ணன் கரும்புலி என்று. இப்பவும் கரும்புலித் தாக்குதல் ஒன்றிற்குத்தான் போகின்றான். போனால்....

சினன்குடாவில் இலக்குகளை அழித்துவிட்டு வந்தமாதிரி இந்தச்சண்டையிலும் இலக்கை அழித்துவிட்டு அண்ணன் திரும்பி வரமாட்டானா?! அவளது மனம் பிரார்த்தித்தது.

உயிரோடு ஒட்டிய உறவல்லோ. சுபேசனிற்கும் வேதனையாகத்தான் இருந்தது. தங்கையின் கண்ணீரைத்துடைத்து " அழக்கூடாது. தலைவர் இருக்கிறார். கவலைப்படக்கூடாது" தங்கையிற்கு அறிவுரை சொல்லி, ஆறுதல் வார்த்தைகள் கூறி எவ்வளவோ மனப்போராட்டத்தின் மத்தியில் பிரிக்க முடியாது பின்னிப் போன உறவை பிரித்துக்கொண்டு வாகனத்தில் ஏறி அமர்ந்துகொள்கிறான்.

அவள் அண்ணனுக்கு கையசைத்தாள். அவனும் கையசைத்தான். விநாடிகளைக் காலம் மிக வேகமாக விழுங்கிக்கொண்டது. தங்கையின் விசும்பல் காதில் கேட்கிறது. தங்கையின் சிறு கலக்கத்தைக் கண்டு தாங்கிக்கொள்ளமுடியாத சுபேசனிற்கு எப்படி இருந்ததோ.

வாகனம் மெல்ல மெல்ல நகரத்தொடங்குகின்றது. மீண்டும் ஒரு தடவை தங்கையைப் பார்த்துவிட வேண்டுமென ரோச்சடித்துத் தங்கையைப் பார்க்கின்றான். தங்கையின் முகம் தெரிகிறது. அவளின் வாட்டத்தைக் கண்டதும் அவளிற்கு ஆறுதல் சொல்லவேண்டும்போல் துடித்தது அவன் மனம். வாகனம் மெல்ல மெல்ல வேகம் கூடியது. பிரிவைத்தாங்க முடியாது சுபேசன் தலைகவிழ்ந்துகொள்கின்றான்.

இந்த இறுதி நேரம் அவன் உணர்வுகள் எத்தனை தடவை சிலிர்த்திருக்கும் இவ்வளவு பாசமான உறவினைவிட இந்தத் தேசத்தின் மீதும், மக்களின் மீதும் எவ்வளவு உன்னதமான பற்று வைத்திருக்கின்றான். அவனது இலட்சியம் எவ்வளவு புனிதமானது. அவன் தன் தேசத்தில் எல்லோரையும் ஆழமாக நேசித்தான். அதனால்தான் அவர்களின் துயரத்தைக்கண்டு தாங்கிக்கொள்ள முடியாமல் கரும்புலியானான். அடுத்தவர் துயரத்திற்கு தோள்கொடுக்கவும், மற்றவரின் வேதனைக்காக கண்ணீர் சிந்தவும் பழகிய இதயம் அவனது இதயம். தலைவர் ஒரு போராளியை எப்படியெல்லாம் எதிர்பார்த்தாரோ அத்தனையும் பிரதிபலிப்பதாகத் திகழ்ந்தான்.

1993ம் ஆண்டு தன்னைக் கரும்புலிகள் அணியில் இணைத்துக் கொண்டவன் சுபேசன். இன்று வரை எத்தனை ஆண்டுகள் மனம் சலிக்காது கொள்கை ஒன்றையே நெஞ்சில் சுமந்து எவ்வளவு

( 09 ஆம் பக்கம் பார்க்க )



www.eelamview.com

( 03ஆம் பக்கத் தொடர்ச்சி )

## இனி வெல்வது ..

களை பறித்தெடுத்தார். கொசோவோவின் மிகச்சிறிய அளவில் வாழ்ந்த (கொசோவோவின் குடித்தொகையான 02 மில்லியனில் 1.8 மில்லியன் கொசோவோ அல்பேனிய இனமக்களே. மிகுதியே சேர்பியர்) சேர்பியரைத் தூண்டி இனப் படுகொலையை தொடர்ந்தனர். இத்தகைய கொடுமைகளுக்கு வரலாற்றினை வேறு அவர் துணைக்கு அழைக்கின்றார் 600 ஆண்டுகளுக்குமுன் கி .பி 1389இல் கொசோவோ சமரில் தருக்கிய இஸ்லாமியர் வைதீக கிறிஸ்தவரான தம்மை தோற்கடித்தமைக்கு பழிவாங்க அலையும் சேர்பியர், துருக்கிய ஒட்டோமன் சாம்ராய்ச்சியத்தின் ஆட்சியின் விளைவாக தோன்றிய கொசோவோ அல்பேனியரை தமது விபரீத மனநிலைக்கு பலியாக்குகின்றனர். புனிதபூமி ஜெருசலேம், கொசோவோவை கைவிடோம் எனக்கூறி பேரினவாத நிலை வளர்க்கும் இவர்கள் போக்கினை சிங்களவரின் பௌத்த பேரினவாத வெறியோடு ஒப்பிட்டுப் பாருங்கள்.

சேர்பியரின் அட்டூழியங்களுக்கு எதிர்வினையாக 1996 இல் KLA எனப்படும் கொசோவோ விடுதலைப்படை உருவாகி சேர்பியர் மேல் தாக்குதல்களை தொடங்கியது. கொசோவோ மக்கள் தமது தாயகத்திற்காக போராடலாயினர். 1997, 1998 களில் சேர்பியரின் படுகொலைகள் எல்லை மீறின. தனக்குப் புறத்தே நடக்கும் கொடுமைகள் தனக்கு அவமானத்தை தருவதைத் தடுக்க போல்கன் பகுதியில் தனது மூக்கை நீட்டி மேலாண்மையை நிலைநாட்ட அமெரிக்கா நேரடியாக நேட்டோ துணையோடு தலையிட்டது

1998 அக்டோபரில், ஹோல்புறுக்கை தூதராக அனுப்பி மிலோசவிச்சோடு உடன்பாடொன்றை அமெரிக்கா செய்த போதும், அதனால் ஏற்பட்ட அமைதி சில மாதங்களே நீடித்தது. இறுதியாக, அண்மையில் பிரான்சின் றம்பூலேயில் நடைபெற்ற பேச்சுக்களையும் மிலோசவிச் கணக்கில் எடுக்கவில்லை எனக்கொண்ட அமெரிக்க - நேட்டோ தரப்பு ஐ.நாவைக் கூட கலந்தாலோசிக்காமல் சேர்பியரை தண்டிக்க தொடங்கி விட்டது. பொருண்மியத் தடை, தரைப்படையனுப்பல் என கதை இப்போது நீள்கின்றது.

இந்தப் பின்னணியில்தான் எம் மக்கள் உலகின் மனச்சான்றை உலுக்கத் தொடங்கியுள்ளனர். புதிய நூற்றாண்டிற்குள் புத்துணர்வோடு உலகம் பிரவேசிக்க ஆயத்தமாகையில் வரலாற்றின் பாவச்சுமைகளைச் சுமந்து பின்னோக்கி முன்னேறும் சேர்பியரை கடுமையாக தண்டிக்கும் உலகம் அதே பாவச்சுமைகளை சுமக்கும் சிங்களப் பேரினவாதிகளுக்கு துணை போவது ஏன்? இக் கேள்வியை மட்டுமே எம்மக்கள் எழுப்புகின்றனர். ஏனெனில் சிங்களப் பேரினவாதிகளைத் தண்டிக்கும் பொறுப்பை அவர்கள் தம் கையில் எடுத்து விட்டனர். எம் மக்களின் விடுதலையுணர்வின் உளவுறுதியின் வெளிப்பாடாக திகழும் எந்தலைவர், அதனாலன்றோ உலகைப் பார்த்து இவ்வாறு சொல்கின்றார்.

" வாழ்வது ஒருமுறை
வருவது ஒருமுறை
வெல்வது இனிமேல் "

⊙



## உயிர்த்த பாடல்

எத்தனை எத்தனை பாடல்கள் முகிழ்த்தன பூமியில்.
ஒவ்வொரு பாடலும்
அதனதன் இயல்பில்
அழகழகாய் உலவின காற்றில்.

சிலிர்க்கும் பாடலொன்று இருந்ததாம் எங்களுக்கும்
முன்பொரு காலத்தில்.
மரபணுமூலங்கள் பாடியிருந்தனவாம் பலகாலங்கள்,
பருவாதுக்களில் மிதந்துவந்த பறவைகளும்
பாடல் மாந்தி
திசையெலாம் காவினவாம் இறங்கி.

பாலோடு உமிந்துமிந்து
குருதியினூடு கலந்த பாடல்
பிறகொரு காலத்தில் குளிர்ந்துபோயிற்று.
மெலிந்து மெலிந்து சுருதி கண்டிற்று.
தொண்டை கட்டி
சாரீரம் மொத்தமும் அசுத்தம் பிசிறிற்று.
பின்பு
அதன் சரவமே இல்லாமல்
மௌனத்தில் உறைந்தது பாடல்
எங்களின் பாடல்.

கல்லுகளான காலத்தில்
எங்களுக்கென்றொரு பாடல் இருந்ததாய்
கல்லுகள் சொல்லின
சுற்குறிப்புகளுக்குப் பொருள்விரித்து
போற்றிப் புலம்பிப் பொழுதழிந்தோம்.
பாடல் பற்றிய கதையே ஒரு பாடலாயிற்று.
பிறகென்ன
அதையே பாடியிருந்தோம் உண்மைப் பாடல் மறந்து.

காத்திருந்த கல்விடற வந்த திருப்பாதமென
கால நிராலப் பெருமௌனச் சாபம்
உதைத்தெழுந்த
ஒரு குரலின் ஓங்காரநாதம்
ஓராயிரம் நாண் இழைந்த வலிதாய்
சொடுக்கொலித்தது சட்டென்ன
கனிரென்றது செவிப்பறை.
உறைந்த பாடல்
உச்சஸ்தாயியில் உருவெழுந்தது.
சுத்த சாரீரம் நெஞ்சுகளெர்ந்த
குடுகெறித்தது குருதியில்.
பாடலாய்த் ததும்பிற்று நாவெல்லாம்.

நுரையீரல் உப்பக் காற்றிழுத்து
தொண்டை நரம்புகள் புடைக்க
குரல்பெருக்கி நீயும் பாடேன்
உனது பாடலை.
வானிடை அதன் வெளியெனவாகி
நீரெலாம் அதன் ஈரமென்றாகி
பூமி திசைக்கப் பாடு
உயிர்த்த பாடலை.

பாடலற்ற காற்றிழுக்கும் நாசித்துவாரங்கள் எதற்கு!

– எஸ் . உமாஜிப்ரான்

( ஓவியம்: வீரசந்தானம் )

( 08ஆம் பக்கத் தொடர்ச்சி )

## வன்னிக்...

இரண்டு வருடத்தில் புலிகளின் பீரங்கிப் படையின் உருவாக்கமும், வளர்ச்சியும் வன்னிச்சமர்க்களத்தில் எதிரிக்குப் பெரும் சவாலாக அமைந்தது. புலிகளின் பீரங்கிக் கையாளுகையினால் எதிரி தரப்பு அச்சமடைந்துள்ளது. இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள இராணுவத்தளத்தின் மீது தாக்குதல் நடாத்தியது மட்டுமல்லாது அதன் முக்கிய பகுதிகள், அவற்றின் முக்கியத்துவம் கருதிக் தாக்குதல் நடாத்தப்பட்டிருக்கிறது. இவ்வாறான துல்லியமான தாக்குதல் புலிகளால் எப்படி சாத்தியம்? என்பதே எதிரி விடைகாணத் துடிக்கும் கேள்வியாகியிருக்கிறது.

புலிகளின் பீரங்கிப்படையணியின் அபரிமிதமான ஆற்றல் வன்னிச்சமர்க்களத்தின் தீர்மானத்திற்கு புலிகளுக்கு மேலும் வலுச்சேர்க்கும். புலிகளின் இத்தாக்குதலால் இராணுவத்தரப்பு முன்பிருந்த திட்டத்தைக் கைவிட்டு பூவரசம் குளத்திலிருந்து மடுவினூடாக மடுவிற்கு முன்னேறும் முடிவை எடுத்தது. முன்னேறும் இராணுவத்தை ஆள் இழப்பற்ற வகையில தடுத்து நிறுத்தி தாக்கியழிக்கும் திட்டத்தோடு நடவடிக்கைகளாக எமது அணிகள் ஏற்பாட்டு வேலைகளில் இறங்கின.

மடுத்தளத்தின் பேராயர் வணபிதா இராயப்பு யோசப் அடிகளார் களமுனைத் தளபதியிடம் " மடு ஒரு புனிதத் தலம். இந்த மடுப்பிரதேசத்தின் சுற்றுச்சூழலில் ஒரு தாக்குதல் நடவடிக்கையால் இரத்தக்களரி ஏற்படுவது நல்லது அல்ல. இதைத்தவிர்க்கவும் " என்று கேட்டதற்கு இணங்க, எமது தலைவரின் பணிப்பின்பேரில் எமது அணிகள் தாக்குதல் திட்டத்தைக் கைவிட்டு மடுப்பிரதேசத்தைவிட்டு பின்வாங்கின.

இப்போது இராணுவம் மடுப்பிரதேசத்தை ஆக்கிரமித்து மடுப்புனிதத்தலத்திற்கு பங்கம் விளைவித்து வருவதாக பேராயர் குரல் கொடுக்கிறார். ஜனாதிபதி சந்திரிகாவிற்கும் இதுபற்றி மகஜர் அனுப்பியுள்ளதாகத் தெரிவித்து உள்ளார். ஆனால் அரசோ புலிகள் மீதான மாபெரும் வெற்றியாக இதைக் கூறிக்கொண்டது. கிறிஸ்தவர்களின் மதவழிபாட்டு உரிமையை பெற்றுக்கொடுத்ததாக பீற்றிக்கொண்டது.

ஆனால் ஆக்கிரமிப்பின் முன்பு இத்தேவாலயத்திற்கு எவரும் வந்து தொழுகை நடத்தவோ, மதநடவடிக்கையில் ஈடுபடவோ சிங்கள மக்களுக்குக் கூடப் புலிகள் என்றும் தடைவிதித்ததில்லை.

இவ்வாறிருக்க மடுப்பிரதேச ஆக்கிரமிப்பைப் புலிகள் மீதான வெற்றியாகவும், புனித தலத்தை மீட்டதாகவும் அரசு கூறுவதில் அர்த்தம் என்ன இருக்கிறது; தேர்தலுக்கான வாக்குத்திரட்டல் என்ற நோக்கத்தைத் தவிர.

" ரணகோஷ " நடவடிக்கையில் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் புலிகளின் " விசேட தாக்குதல் அணி " இராணுவத்தின் மீது தாக்குதல் நடத்தி வருகிறது. இப்பகுதிகளில் மட்டும் மே 14 வரையிலான நாட்களில் மொத்தம் 85 பேரை இராணுவ தரப்பு இழந்துள்ளது. இதில் 49 பேர் மன்னாரிலும், மிகுதிப் பேர் வவுனியாப் பிரதேசத்திலும் கொல்லப்பட்டுள்ளனர்.

இவ்வாறான களநிலைமைகளில் தேர்தல் வெற்றிக்காக செய்யப்பட்ட இராணுவ நடவடிக்கைகள் வருங்காலத்தில் சந்திக்க இருப்பது என்ன? இந்த நடவடிக்கையால் வன்னிச்சமர்க்களத்தில் புலிகள் ஏற்படுத்தப்போகும் மாற்றம் என்ன? இராணுவமும் அரச தரப்பும் இதைப் பொறுத்திருந்துதான் கண்டு கொள்ளவேண்டும்.

⊙

www.eelamview.com



# அடங்காமண்ணுக்கு விலங்கிடத்துடிப்பவனே உன்னைப்பார்த்து அழுவதா? சிரிப்பதா?

கதவுதிறந்து வெளியேவந்தன காகங்கள்.
முகம்மறைத்த முகிலின் திரைவிலக்கி
நிலவு இப்போ நேராகப் பார்க்கத்தொடங்கியது
காற்றை எதிர்கொள்ள மரங்கள் தயாராகிவிட்டன.
இனி விழுதறுந்து போனாலும் வேர்கள் மரத்தைத்தாங்கும்.
குப்பைக்குள்ளும் நெருப்புவளரும் காலமிது.
பொத்திப் பொத்தி வளர்த்த குஞ்சுகள் மட்டுமல்ல
தாய்க்கோழிகளும் சண்டைக்குப் புறப்பட்டுவிட்டன.
இதுவரை தாய்ப்பசுக்கள் பாலூட்ட
கன்றுகள் களமிறங்கின.
இப்போ பால்மடிப்பசுக்களே பயிற்சியெடுக்கின்றன.
நேற்றுவரை காளைகள் சூடடிக்க
கைத்தடிகள் ஓய்வெடுத்தன.
இன்று பஞ்சுத்தலைகளும் சேர்ந்து பயிற்சியெடுக்கின்றன
அட— பைத்தியக்காரப் பகைவனே!
வாய்க்காலைத்தடுத்துத் தண்ணீரை மறித்தாய்
இந்தாபார் வரம்பேயுடைந்து பாய்கின்றது.
வளையிருந்த முயல்களைக் குழியடைத்து விரட்டினாய்.
கூடுடைத்து கலைத்தாய் குருவிகளை.
பூக்களில் அமரவாசமேதென
தேனீக்களுக்குப் புதியகட்டளை பிறப்பித்தாய்.
எல்லாமே உனக்கு விக்லங்கமானது.
குரல்வளை நெரித்துக் குதற நினைத்தாய்
இப்போ பெருவிரல்களும்கூடப் பாடத்தொடங்கின.
அடங்காமண்ணுக்கு விலங்கிடத்துடிப்பவனே
உன்னைப்பார்த்து அழுவதா? சிரிப்பதா?
ஈழத்தமிழன் சிரட்டியிற்செய்த அண்டாகுண்டா அல்ல —
போட்டதும் உடைந்துபோவதற்கு.
இவன் உருக்கில் வார்த்தெடுத்த தாச்சிச்சட்டி.
நெருப்புப்படப்பட இன்னும் உருக்காவான்.
கைத்தடிக்கே அடங்கிய காலமொன்றிருந்ததுதான்.
காக்கிச்சட்டையைக் கண்டஞ்சிய காலமும் இருந்ததுதான்.
எல்லாமே புஸ்வாணமாக எழுந்தன எம்தலைகள்.
இன்று பிரமிக் ஆழமிழந்தான்
எமபிள்ளைகள் புல்லாங்குழல் வாசிக்கின்றனர்.
வைரவாளைச் சக்கரங்களைச் சேகரித்து
காவலரண் அமைக்கின்றனர்.
பகைவனின் தலைக்கவசத்திற்தான் தண்ணீர் கொதிக்கிறது.
காலால்நெரித்துக் கசக்கிவிடலாமென நினைத்தனை.
நெரிக்க நினைத்தபாதங்களில் நெருஞ்சிமுள்ளேறுகிறது
இதுதான் புலிவீரத்தின் புதிர்.
"சும்மா கிடந்த சங்கை ஊதிக்கெடுத்தானாம் ஆண்டி"
பொருத்தமான பழமொழியானது.
முளைத்தமரம் வேர்விடும்.
சடைத்தமரம் விழுதெறியும்.
தர்மத்தின் வாசலைத் தாளிடவா துடிக்கின்றாய்?
அடமடையா! அதர்மத்துக்கு ஆயுள்கம்மி.
ஈழத்தமிழன் நீரடிநீரூற்றின் தோற்றுவாய்
தோண்டத் தோண்டச் சுரப்பான்.
அள்ளி இறைக்கநினைத்தால் அறுவற்றாது.
முறைத்த கைகளே அறுந்துப்போகும்.
புலிகள் முறிந்துபோக பதரிடுக
முறிந்து போவார்களேயன்றி
வளைந்து போகமாட்டார்கள்.
அழியில் அழிவார்களேயன்றி அடிபணியமாட்டார்கள்.
கோடையிற் கருகிக்கிடந்தாலும்
மாரியிற் துளிரெறிந்து படரும்
அறுகின் வேரறுத்து அழிக்கமுடியுமென்றா நம்புகின்றாய்?
உலகெங்கும் விசாலித்த புலியவைரம் எம்சாதி.
பாலைவனத்திலும் எம்பரம்பரை உண்டு.
துருவப்பகுதியிலும் எம் சொந்தங்கள் உண்டு.
நெருப்பிற்குளித்து நிமிர்ந்தவள கோபுரத்தைப்பார்த்து
மண்மேடொன்று மார்பிலே தட்டியதாம்.
மழுப்பிடித்த மமதையில் திமிர்பிடித்தா நிற்கின்றாய்?
பழுகுழியொன்று உன்பக்கத்தில் தோண்டப்பட்டுள்ளது.
குழிபதியாது குதிப்பவனே!
இனிவழியெங்கும் உனக்கு வலைவிரித்துள்ளோம்.
பொன்கொழிக்க பூத்துக்கிடந்த எங்கள் பூவனத்தை
கண்ணிவயலாக்கிக் காடாக்கினீர்.
வண்ணம் குலையாதிருந்த எங்கள் வசந்தவாசலை
சன்னம் தெறித்த தகனம் செய்தீர்.
இன்னும் பொறுத்திருப்போமென எப்படி எதிர்பார்ப்பீர்?
நீர்மட்டும் நாட்டாண்மை காட்டிக்கொண்டு
எம்மை எழும்பக்கூடாதென எப்படி உத்தரவிடலாம்?
அம்மா சந்திரிகா! நினக்கோர் விண்ணப்பம்.
நேற்று சமாதான வேடமிட்டு நீயும் வந்தாய்.
சந்திதானும் கொண்டாடினாய்
நாமும் முகமலர்ந்து நம்பிக்கையுற்றோம்.
மூன்றே மூன்று மாதத்தில் உன்முகமூடி கலைந்தாய்
உள்ளேயிருந்த குருதிவழியும் கோரப்பற்கள்.
யுத்தப்பிசாசென எம்மையே சுட்டினாய்
விக்கித்துப்போனோம் நாம்.
சுட்டெரிக்கத்தொடங்கி எம்மண்ணைச் சுடுகாடாக்கினாய்.
இனியும் புலிகளை அழிப்பேனெனப் புலம்பாதே
செய்துகாட்டு தாயே.
அழிவது யாரென அதன்பிறகு தீர்மானிப்போம்.
அடிசரிந்து வீழ்வோமா நாங்கள்?
எத்தனை புயல்களைத் தாங்கியது எமது இனம்!

## உலைக்களம்

- வியாசன்

எத்தனை தாக்கியும் அழிந்ததா? இல்லையே.
நிமிர்ந்துதானே நிற்கிறது.
இந்திரலோகத்திலிருந்தா இறங்கியது சிங்களச்சாதி?
சதிப்புழுவானதா தமிழ்ச்சாதி?
ஏனிந்த எடுத்தெறிவு?
ஏனிந்த அருவருப்பு?
வையம் அறியாதா எங்களின் வரலாறு?
முழுப்பலத்துடன் விரைவிலெம் யுத்தத்தில் சந்திப்போம்.
அப்போதறிவாய் எங்களின் ஆற்றல்.
நேற்றுவரை தமிழினம் தாழ்ந்திருந்ததென்னவோ உண்மைதான்
எனினும் வீழ்ந்தறியா விலாசமுடையது எமது இனம்.
முழுமையான பலத்துடன் எழுவோம் தமிழரே
எழுபதுவயதிலும் பிடிமயிர் சிலிர்த்து
பயிற்சி எடுக்கும் பாட்டிகளே!
உம் பாதம் தொழுதோம்.
விடுதலைக்கனவோடு விழுதமைத்த முதிர்வேர்களே!
மடுமாதா கோயிலுக்காகட்டும்
உமது யாத்திரைப்பயணம்.
மாதாகோயில் மணியோசை உம்மை ஆசீர்வதிக்கட்டும்.
வரலாற்றில் உம்நாமம் வாழும்.
பகைவன் உம்பிடியிலிருந்தே பதறுவான்
கரையுடைத்த எழும் அலையென ஆர்ப்பரிக்கும்
உம் குரலொலித்த எதிரியின் குடல் நடுங்கும்.
இங்கே குடிசைகள் ஒவ்வொன்றும்
இப்போ புலிக்குகை ஆச்சு.
இனியும் விடியாமலா போகும்?
காத்திருந்த காலமே எங்கள் கைகளில் வந்தது.
போர்த்திறன் காட்டும் இனிப் புலிச்சேனை.
சுற்றிநிற்கும் எதிரிப்படை திக்குமுக்காட
பற்றியெரியும் நெருப்பு.
இனிவரும் காலம் எமதே.

☆ ☆

பணிந்துப்போகத் தமிழன்
என்ன நனைந்த கோழியா?
குனிந்துபோகப் புலிகள்
என்ன நாணல் வேலியா?
சாவுக்கு நாளிலிச் சாவெழுதி - பகை
ஊறும் குருதியில் நாம் மூழ்கி
வேகமெடுத்திடுவோமடா - இந்த
வீரமண் வென்றிடும் ஆமடா.



www.eelamview.com